
...gistered as a News Paper in Sri Lanka
விலை : ரூபா 10 .00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU
முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 16 திங்கட்கிழமை (01.08.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 306

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C7790)



இது ஒற்றுமையாகும் காலம் (08)



தீர்வு இந்தியாவின் கையிலாம்... (14)



பல கோணங்களில் ஆய்வு வேண்டும் (12)

மழலைகள் விளையாட்டு விழா



(06)

# தமிழ் விஞ்ஞானிக்கு அமெரிக்க உயர் விருது

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் விஞ்ஞானி ஒருவருக்கு அமெரிக்கா தனது நாட்டின் அதியுயர் விருது ஒன்றை வழங்கிக் கௌரவித்துள்ளது. பேராசிரியர் வேல்முருகு ரவி ரவீந்திரன் என்பவரே இக்கௌரவத்தை பெற்றுறிருப்பவர் ஆவார். இவர் மிருகங்கள் , பறவைகள் தொடர்பாக ஆய்வுகள் நடாத்தி வருகின்ற விஞ்ஞானிகளில் முக்கியமான ஒருவர்.

கோழிகளுக்கான ஊட்டச்சத்து உணவு தயாரிப்புத் துறையில் புகழ்பெற்ற நிபுணர் ரவீந்திரனுக்கு கோழிகளுக்கான ஊட்டச்சத்து ஆராய்ச்சி விருதை உணவூட்டலுக்கான அமெரிக்க கைத்தொழில் சங்கம் வழங்கியுள்ளது.

# பொதுமக்கள் எவரையும் படையினர் தாக்கவில்லை

## திருமதி தமிழ்ச்செல்வன் கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கப் படையினர் சிவிலியன்கள் மீது எவ்வித தாக்குதல்களையும் நடத்த வில்லை என புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனின் மனைவியும், புலிகளின் முன்னாள் கடற்படைத் தளபதி சூசையின் மனைவியும் தெரிவித்துள்ளனர். ரிவிர என்ற சிங்களப் பத்திரிகை இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

ஆயுதம் ஏந்திய புலி உறுப்பினர்களைத் தவிர வேறு பொது மக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை என தமிழ்ச் செல்வனின் மனைவி தெரிவித்துள்ளார்.

போராட்டம் முடிவடையும் வரையில் தாம் போர் வலயத்தில் இருந்ததாகவும், படையினர் குற்றச் செயல்களில் ஈடுபட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ச் செல்வன் உயிரிழந்த

(15ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடனான பேச்சை நிறுத்திக்கொள்வோம்

## ...ச்சரிக்கும் தொனியில் சுரேஷ் எம்.பி.



(கொழும்பு)

...இனப்பிரச்சினைக்கு அரசி... தீர்வு காண்பதற்கான எழுத்து மூலமான தீர்வுத்திட்டத்தை அரசு சமர்ப்பிக்காவிட்டால் அரசுடனான அரசியல் பேச்சுவார்த்தைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்திக் கொள்ளும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

"ராவய" என்ற சிங்கள வார இதழுக்கு விசேடமாக அவர் வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கான பிரேரணைகளை உள்ளடக்கிய எழுத்து மூலமான ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்விடயத்தில் அரசு

(15ஆம் பக்கம் பார்க்க)

# பல கட்சிகளுடனும் பேச்சு அதன் பின்னரே தீர்வு

இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு தனியொரு அரசியல் கட்சியின் இணக்கப்பாட்டுடன் தீர்க்கக்கூடிய விடயம் அல்ல என்று அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என சுட்டிக்காட்டியுள்ள அவர் இலங்கை தொடர்பாக மேற்குலக நாடுகள் இரண்டு விதமான கொள்கைகளை பின்பற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை ஒரே இரவில் தீர்க்கக்கூடியதல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வீதி விபத்து இளைஞன் மரணம்

யாழ்.மானிப்பாய் வீதியில் பள்ளிவாசல் அருகில் லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் பலியானார்.

ஓட்டுமடத்திலிருந்து யாழ். நகர் நோக்கி இரும்பு ஏற்றி வந்த லொறியுடன் யாழ்.நகரிலிருந்து மானிப்பாய் வீதி, பள்ளி வாசலுக்கு அண்மையில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த முஸ்பிகான் (வயது-21) என்ற இளைஞனே ஸ்தலத்தில் பலியானார்.

இளைஞரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஸ்தலத்திற்கு விரைந்த யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (105)

# உள்ளூராட்சி உறுப்பினர்கள் இன்று சத்தியப் பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

...நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் ...ற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர ...ன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அங்கத்தவர்கள் ...ின்று திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலை...யில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

இதற்காக இவர்கள் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து ...காழும்புக்கு புறப்பட்டுச் சென்றனர். (75)

# ஐயாயிரம் பேர் வாக்குரிமை இழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ...ருடம் மேற்கொள்ளப்பட்ட 2010ஆம் ஆண்டுக்கான வாக்...ளர் இடாப்பு மீளாய்வில் 3 ...ிராம சேவகர் பிரிவுகளைச் ...சேர்ந்த 5 ஆயிரம் வாக்காளர் ...ள் வரையில் பதிவு செய்யப்...படாமல் தவறவிடப்பட்டுள்ளனர். ...கிராம அலுவலர்கள் மற்றும் ...அதிகாரிகளின் அசமந்தப் ...போக்கால் இந்த நிலை ஏற்பட்...டுள்ளது.

பல வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் வாக்காளர் பெயர்ப்பட்டியல் முதன்முறையாக மீளாய்வு செய்யப்பட்டது. இதன்போது கிராம அலுவலகர்கள் வீடு வீடாக "பிசி" படிவம் விநியோகிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது.


இருப்பினும் 3 கிராம சேவகர் பிரிவுகளில் அவ்வாறான

(15ஆம் பக்கம் பார்க்க)

# 'சப்றா' நிதி நிறுவன மோசடியில் ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பு

## போட்டு உடைக்கிறார் பேராசிரியர் கூல்





(யாழ்ப்பாணம்)

"உதயன்" "சுடரொளி" பத்திரிகை நிறுவனம், லக்ஸ்மி ஹோட்டல் மற்றும் கேற்வே கல்வி நிறுவனங்கள் பலவற்றின் உரிமையாளரும், கோடீஸ்வரருமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் "சப்றா" நிதி நிறுவன மோசடியில் வேறு சில கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்புபட்டிருந்தனர் என அம்பலப் படுத்தியுள்ளார் பேராசிரியர் கூல். இதுவரையில் சரவணபவனும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே இந் நிதி மோசடியில் சம்பந்தமாயிருந்தனர் என பரவலாக தெரிய வந்திருந்த நிலையில், பேராசிரியர் கூலின் இந்தப் பகிரங்க அறிவிப்பு பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெருமளவிலான தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க விரும்பாததற்கு மூன்று காரணங் களை குறிப்பிட்டுள்ள பேராசிரியர் கூல், பலருடைய வாழ்க்கையை அழித்த "சப்றா" நிதி நிறுவன மோசடியில் சில கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்பிருந்தது முதல் காரணம் எனக் குறிப்பிடுகிறார். இரண்டாவது காரணமாக, ஈ.பி.ஆர்.எல்.எப்.- கட்சியின் பணத்துடன் ஓடி பின்னர் புலிகளுடன் இணைந்து கொண்டவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடன் இணைத்துக் கொண்டதை குறிப்பிடுகிறார். இது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனை குறிப்பிடுவதாகவே கருதப்படுகிறது.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் கூல்-தமிழரசுக் கட்சித் தலைவர் பேராசிரியர் சிற்றம்பலம், சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோருக்கு மிகவும் நெருக்கமானவர். இதே கட்டுரையில்

(15ஆம் பக்கம் பார்க்க)

# அகில இலங்கை சைவ மகாநாடு இந்த வாரம் யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கைச் சைவ மகாநாடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் 6 ஆம் 7 ஆம் நாள்களில் (வெள்ளி, சனி, ஞாயிறு) யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தமிழகம் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் சா.சரவணன் மகாநாட்டுப் பெருந்தலைவராகச் செயற்படவுள்ளார்.

முதலாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு வண்ணைச் சிவன் கோவிலில் இருந்து ஊர்வலம் இடம்பெறும்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம், துறைசை ஆதீனத் திருமுறைத் தோன்றல் தேவார இசைமணி இ.திருஞானசம்பந்தன் ஆகியோரது பண்ணிசை நிகழ்வுகளைத் தொடர்ந்து சைவ பரிபாலன சபையின் சைவப் பிரசார அமைச்சர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை வரவேற்புரை ஆற்றுவார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்தபரமாசாரிய சுவாமிகளின் அருளுரையைத் தொடர்ந்து தமிழ்நாடு முனைவர் சா.சரவணன் 'அன்பே சிவமாய்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார்.

மேற்படி மகாநாட்டுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாகவும், 3 நாட்களும் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ரமழான் சிந்தனை



மனிதர்களே! உங்களிடம் ஒரு மகத்தான மாதம் வருகின்றது. அது பரகத் செய்யப்பட்ட மாதமாகும். அது ரமழான் மாதமாகும். இம் மாதத்தில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். இம்மாதம் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் பிரதிபலன் சுவர்க்கமாகும். இம்மாதத்தில் ஏனையோருடன் அன்புடன் உறவாடி சுக துக்கங்களில் பங்குகொள்வது சிறப்பானதாகும் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (105)

# கால்நடை வைத்தியசாலை பண்டத்தரிப்பில் அமையும்


(ஆனைக்கோட்டை)


சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான கால்நடை வைத்தியசாலையை பண்டத்தரிப்பில் நிரந்தரமாக அமைப்பது என்று விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் வடக்கு மாகாண செயலாளரினால் உறுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்திய நிலையத்தை அமைப்பதற்கு பண்டத்தரிப்பிலும், நவாலியிலும் 2 காணிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

இதில் பண்டத்தரிப்பில் இவ் வைத்தியசாலையை அமைப்பதற்கு தயாரானபோது பல பொது அமைப்புக்கள், பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், நவாலியில் இவ் வைத்தியசாலையை அமைக்குமாறு மக்கள் கோரியதையடுத்து வைத்தியசாலையை அமைப்பதற்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது மீண்டும் பண்டத்தரிப்பிலேயே இது அமைய வேண்டும் என செயலாளரின் முடிவிற்கு இணங்க நிறுத்தி வைக்கப்பட்ட வேலைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (104)





மக்கள் வங்கியின் 50 ஆவது பொன்விழா நிறைவையொட்டி நேற்று நடைபெற்ற நிகழ்வில் மாற்றுவலுவுடையோர்களுக்கான உபகரணங்களை பிரதம விருந்தினர்கள் வழங்குவதையும், மாற்றுவலுவுடையோர் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (படங்கள்:- சுமித்தி, சுரேன்)

## பொதுக்கூட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி ஊரியான் உப திட்டக் குழுவினைப் புனரமைப்பது தொடர்பான பொதுக்கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இரணைமடு திட்டக் குழுவின் தலைவர் தலைமையில் இப்புனரமைப்புக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன், ஊரியான் உப திட்டக் குழுவின் கடந்த ஆண்டுகளின் கணக்கறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக உப திட்டக் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)

# வீதிப் புனரமைப்பு அகலும் அசமந்தப் போக்கு

(அச்சுவேலி)

நெல்சிப் திட்டத்தின்கீழ் பிரதேச சபைகளின் மேற்பார்வையின் கீழ் குடாநாட்டின் பல பகுதிகளிலுள்ள அநேக வீதிகளை திருத்தியமைப்பதற்காக நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ள போதிலும், அவ்வேலைகள் திருப்திகரமான முறையில் செயற்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் பலரும் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இத்திட்டத்தின் கீழ் முக்கியத்துவம் வாய்ந்ததும், பல தசாப்தங்களாக திருத்தப்படாததுமான பல வீதிகள் தொடர்ந்தும் எவ்வித பராமரப்பு நடவடிக்கைகளுமின்றி பொதுமக்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் காணப்படுகின்றது.

எனினும் இது தொடர்பாக பிரதேச சபைகள் மெத்தனப் போக்குடன் செயற்படுவதாகவும் தெரிவிக்கும் பொதுமக்கள் இவ்விடயத்தில் அதிகாரிகள், பொதுமக்கள் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (03)

# உலக தமிழாசிரியர் மகாநாடு மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புரை



(யாழ்ப்பாணம்)

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஒன்பதாவது உலகத் தமிழாசிரியர் மகாநாட்டுக்கு இலங்கையில் இருந்து கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அழைக்கப்பட்டுள்ளார்.

'உலகமயமாதலும் தமிழ் கற்றல் கற்பித்தலும்' என்ற கருப்பொருளை மையப்படுத்தி நடைபெறவுள்ள இம்மகாநாட்டின் முதல் நாள் பொதுவரங்கில் 'புலம்பெயர் பிள்ளைகளின் பொதுக்கல்வி' என்ற பொருளில் ஆய்வுரை நிகழ்த்தும்படி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கேட்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகளில் இருந்து அறிஞர்கள் பங்குபற்றும் இம்மகாநாடு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.


## வகுப்பறை கட்டடம் அமைப்பு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி இயக்கச்சி பாடசாலையில் மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் பெருமளவு மாணவர்கள் இப் பாடசாலையில் கல்வி கற்று வரும் நிலையில் இடநெருக்கடியினை நீக்கும்முகமாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினரின் ஒழுங்குபடுத்தலில் மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடம் ஒன்று தற்போது அமைக்கப்பட்டு வருகிறது. (121)

# கண்டி பெரஹரா ஆரம்பம்



(கொழும்பு)

கண்டி எசல பெரஹராவின் சம்பிரதாய பூர்வமாக காப்பு கட்டும் நிகழ்வுகள் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

காப்புகட்டும் நடவடிக்கைகள் விஷ்ணு தேவாலயம், நாக தேவாலயம், கதிரேசன் ஆலயம் மற்றும் பத்தினி ஆலயங்கள் ஆகிய வணக்கஸ்தலங்களில் இடம்பெற்றன.

எதிர்வரும் 3 ஆம் திக்தி உள்ளக பெரஹரா நடைபெறும் அதேவேளை, நான்காம் திகதி பெரஹராக்களில் விசேட பெரஹராவான கும்பல் பெரஹரா ஆரம்பமாகும்.

இதனை தொடர்ந்து எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை ரத்தோணி பெரஹரா இடம்பெறுவதுடன் கண்டி எசல பெரஹரா நிறைவுபெறும்.

# பரிசில் தின விழா

(வேலணை)

யாழ். மத்திய கல்லூரியினது 195 ஆவது வருடாந்த நிறைவு விழாவும், கல்லூரியினது பரிசில் தின விழாவும் இன்று கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள றொமேன் குக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இலட்சுமணர் ஓங்காரமூர்த்தி தலைமையில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதியும் கல்லூரியினது பழைய மாணவியுமான திருமதி ஜோய் மகாதேவா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

காலை 7.30 மணிக்கு கல்லூரியின் அருகாமையில் அமைந்துள்ள மெதடிஸ் மிஷன் சென். பீற்றர் தேவாலயத்தில் நன்றியும் ஆராதனை வழிபாடுகளும் இடம்பெறவிருக்கின்றன.

இந்நிகழ்விலும் கல்லூரியினது ஆசிரிய சமூகம், மாணவ சமூகம், பெற்றோர், நலன்விரும்பிகள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.



புனித யாகப்பர் ஆலயத்தின் 150 ஆவது யூபிலி ஆண்டினையொட்டி அண்ணாவியர்களான யேசு, பிலிப் ஆகியோரின் நெறியாள்கையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'போர்க்களம்' எனும் தென்மோடி நாட்டுக் கூத்தில் பங்குபற்றிய கலைஞர்களைக் காணலாம். (அ)

## அறிவக ஆண்டு விழா

வடமராட்சி புலோலி வடமேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

சத்தியம் என்ற தாய், ஞானம் என்ற தந்தை தர்மம் என்ற சகோதரன், கருணை என்ற நண்பன், சாந்தி என்ற மனைவி, பொறுமை என்ற புதல்வன் இவர்களே நமக்கு உகந்த உறவினர்கள் ஆவர்.

-வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தலை துணித்துப் படை நடத்தல்

நம்மைப் பற்றி நமக்கிருக்கும் நல்லபிப்பிராய நினைவைத் துறக்க முடியாமலிருப்பது ஒரு பெரிய பிரச்சினைதான்! அதிலும் நாம் ஆண்ட பரம்பரை என்ற கடந்தகால ஆதிக்கப் பெருமித உணர்வும் கொண்டவர்களாயிருந்தால், மற்றவரோடிணங்கி வாழ்வதற்கான தடைக்கல் மேலும் பெரியதாகி விடுகிறது.

தீர்வு நமக்குத் தேவை; ஆனால் அதை முழந்தாளிட்டுப் பணிவாகத் தட்டில் வைத்துத் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நம்மிடம் இருக்கிறது என்று தோன்றுகிறது. அதற்கு வெளியிலிருந்து யாராவது இந்த அரசாங்கத்தை 'உறுக்க' மாட்டார்களா என்ற நப்பாசையே உட்கிடக்கை.

நமது மக்கள் எவ்வளவு இழிநிலையில் அரைபட்டுக் கிடந்தாலும், 'நமக்கு மற்றவர்கள் சமதையானவர்கள் இல்லை' என்ற சிந்தனையிலிருப்பவர்களே இந்த மக்களின் அரசியல் குரலாக மேலோங்கியிருப்பது தமிழ் வாழ்க்கையின் துரதிர்ஷ்டம்தான்!

நமது 'சரி'கள் பற்றியே எப்போதும் நம் நினைவிருக்கிறது. ஆகவே, எதிர்த்தரப்பே மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு இறங்கி வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டுமே நம் ஒரே அரசியல் செயல்பாடாகி விடுகிறது. காத்திருப்பு நீள நீள குற்றச்சாட்டுகளும் சமத்காரமான எதிர்ப்பு அறிக்கைகளுமே நம் கேடயங்களாகிக் கொள்கின்றன. நம் சமூகத்தால் உருவாக்கிவிடப்பட்ட 'பெரிசு'களைப் போன்ற சிறுபிள்ளைத்தனமான முரண்டும் பிடிவாத மறுப்புகளுமே நமக்கான அரசியல்ஞானமாகத் தேங்கிவிட்டிருக்கிறது! அல்லது அரசியல் நடிப்பாகத் தொடர்கிறது.

தீர்வு காண்பதற்குப் பேச வேண்டியது என்ன என்பதைப் புறக்கணிப்பவர்களாகி விடுகிறோம். எதிர்த்தரப்பை இணங்க வைத்து வெல்வதற்குப் பதிலாகக் கோபப்படுத்துவதில் தற்திருப்தி அடைந்து கொள்கிறோம். எதிர்த்தரப்பை ஆவேசப்படுத்துவதில் – பிளவு அரசியலில் குறுகிய அரசியல் ஆதாயங்களைக் கண்டுகொள்கிறோம்.

குரலற்ற மக்கள் மீது துன்பங்களைச் சுமத்தியவாறே 'ரோச அரசியலை' தொடர்கிறோம். எதிரிக்கு வில்லங்கம் கொடுக்க முடியுமாக இருந்தால், அந்தத் திருப்தி ஒன்றே போதுமாக இருந்தால், நாம் மூக்கின்றி இருப்பது பற்றி என்ன கவலை?

நம்மிடம் சரிகள் இருப்பது போலவே எதிர்த்தரப்பும் தன் சரிகளை வைத்துக்கொண்டுதானிருக்கும் என்ற எளிய உண்மையை மறந்துவிடுகிறோம். பிரச்சினை என்னவென்றால், இந்த சரிகளைப் பேசிக்கொண்டிருப்பதால் ஒருபோதும் நல்லிணக்கம் உருவாகி விடுவதில்லை. தங்கள் தங்கள் தவறுகள், குற்றங்கள் குறித்த உணர்வும் பரஸ்பர மன்னிப்புப் பரிமாறலுமே நம்மை நல்லிணக்கம் நோக்கிச் செலுத்துவதாக இருக்கும்.

ஆனால், நம் அறிஞர்கள் பிரமுகர்கள் எனப்படுவோரும், மக்களுக்காகக் குரல் தருவதாகக் காட்டிக்கொள்வோரும் வீரம், ஆண்மை, ரோசம், பழம்பெருமை என்பவற்றைச் சொல்லி வன்முறை மற்றும் எதிர்ப்பு உணர்வைக் கைவிடாதிருப்பதே உயர்வான மனித மதிப்பீடுகளாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பகைவரைப் பணிய வைத்தல் என்னும் வன்முறைப் பேச்சுக்களை ஓர் அற நடவடிக்கையாகக் காட்டும் முயற்சியையே தொடர்ந்து மேற்கொண்டு மக்களது வாழ்வுச்சிதைவை நியாயப்படுத்தி வருகிறார்கள்.

மன்னர்கள் காலத்தில் புலவர் மரபினர் எப்படி மக்களை மன்னருக்கான தற்கொலைப்படையாக்குவதில் தங்கள் பங்களிப்பைச் செய்தார்களோ, அதே மாதிரியாக மக்களைத் தயாரிப்பதையே இவர்களும் செய்து வருகிறார்கள். சாதாரண மக்கள் வாழ்வைத் துச்சமாகத் தூக்கியெறிந்துவிட்டு 'மூத்தகுடிப்' பெருமைகளுக்காகவும் ரோசத்துக்காகவும் கடைப்பிடிக்க வேண்டிய மதிப்பீடுகள், 'றாங்கி'களை இவர்கள் வடிவமைத்துப் போதித்தபடி இருக்கிறார்கள்.

வீரவசனங்கள் பேசியபடி அழியும் பழங்குடிப் பண்புக்கு மக்களை அடிமைகளாக்கி வைத்திருக்கிறார்கள். எதார்த்த நிலையை மறைத்து இவர்கள் காட்டும் பழம்பெருமை மதிப்பீடுகள் பற்றிய முழக்கங்களால் மக்களை மயக்கநிலையில் வைத்திருப்பதுடன் வாழவொட்டாமலும் வதைத்து வருகிறார்கள்.

நம்மையே வதைத்துக் கொள்ளும் ரோசமும் வீம்பும் பழிவாங்கும் திருப்தியும் ஒருபோதும் மக்களது சுதந்திர வாழ்வாகாது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர் -

# கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதி அகலமாக்கிப் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதி அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வீதி முழுமையான முறையில் புனரமைக்கப்படாது இருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேற்றத்தின் பின்னர் வர்த்தக நிலையங்கள் வீதிப் புனரமைப்புக்கு ஏற்றவாறு பின்நகர்த்தி அமைக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி ஏ-9 வீதி தற்போது அகலமாக்கப்பட்டுப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வீதி வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை கிளிநொச்சி நகரினூடாகச் செல்லும் தொடருந்து வீதியும் அகலமாக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (121)

## செட்டிக்குளம் நலன்புரி நிலையத்திலுள்ள 1600 பேர் நாளை மீள்குடியேற்றப்படுகின்றனர்

(வவுனியா)

செட்டிக்குளம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மேலும் 1600 பேர் நாளையதினம் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

செட்டிக்குளத்தில் உள்ள ஆனந்தகுமாரசுவாமி மற்றும் கதிர்காமர் நலன்புரி நிலையங்களில் மொத்தமாக 9182 பேர் தங்கியுள்ளனர். இவர்களிலேயே 1600 பேர் நாளை மீள்குடியேற்றப்படவுள்ளனர். இவர்கள் மீள்குடியேற்றப்பட்டதும் ஆறு மாதங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படும். மீள்குடியேற்ற நிதியாகிய 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தவர்களில் இதுவரை 2 இலட்சத்து 71 ஆயிரத்து 602 பேர் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். நலன்புரி முகாம்களில் இருந்து 98 வீதமானோர் இதுவரை மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(செட்டிக்குளம்)

மின்விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கலைச் சீர்செய்த இராணுவத்தினர் ஒருவர் கடந்த புதன் கிழமை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் செட்டிக்குளம் இராணுவ முகாமில் இடம்பெற்றுள்ளது. கலேவல்ல பிரதேசத்திலுள்ள அந்த கல கிராமத்தைச் சேர்ந்த எஸ்.எம். ஆர்.சமரவீர (வயது-35) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

22ஆவது சிங்கப்படைப்பிரிவைச் சேர்ந்த அவர் இராணுவத்தினரின் பல நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் எட்டுத் தங்கப்பதக்கங்களையும் பெற்றவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது இறுதி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

## கொமர்ஷல் வங்கியினால் மாணவர்கள் கௌரவிப்பு

(முரசுமோட்டை)

கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசல் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சி வலயத்துக்குட்பட்ட மாணர்களில் அருணலு சிறுவர் சேமிப்புத திட்டத்தின் கீழ் வைப்பிலிட்ட மாணவர்கள் கொமர்ஷல் வங்கி கிளிநொச்சிக் கிளையினால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கே.கணேசலிங்கம், ஆசிரிய ஆலோசகர் விஜயநாதன், கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரஜீவன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியதுடன், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கி வைத்தனர். இதில் 7 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (110)

## வெலிக்கடைச் சிறைக் கைதிகளின் விபரங்கள் கணினி மயப்படுத்தல்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் விபரங்களை கணினி மயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸ் அதிகாரி லக்ஸ்மன் அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சகல கூடங்களிலும் உள்ள கைதிகளின் விபரங்கள் கணினி மயப்படுத்தப்படும். ஆண்கள் கூடத்தில் 3464 கைதிகளும், பெண்கள் கூடத்தில் 569 கைதிகளும் சிறைச்சாலை வைத்தியசாலைச் கூடத்தில் 300 கைதிகளும் தங்கியுள்ளனர். கைதிகள் தொடர்பான தனிப்பிட்ட தரவுகள் யாவும் கணினி மயப்படுத்தப்படும் தகவல்களில் உள்ளடக்கப்படும். கைதியின் முழுப்பெயர், நிரந்தர முகவரி, வயது, பிறந்த திகதி, விசேட தகைமைகள, கல்வித் தகைமைகள், குடும்ப நிலை, புகைப்படம் என்பன இந்த விபரங்களில் உள்ளடக்கப்படும்.

சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகள் தொடர்பான தகவலை இலகுவாகப் பெறுவதற்காகவே இந்த நடைமுறை அமுலுக்கு வருகின்றது.

யு.என். டி.பி நிறுவனம் இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளது என்றார்.

## உப உணவுச் செய்கையில் நானாட்டான் விவசாயிகள்

(அச்சுவேலி)

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேச விவசாயிகள் பலரும் மரக்கறிப் பயிர்ச்செய்கை மற்றும் நிலக்கடலைப் பயிர்ச்செய்கை ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டி வருவதைக் காண முடிகின்றது.

நீர்ப்பாசனக் குளங்களில் போதிய அளவில் நீர்காணப்படுகின்றமையால் சிறுபோக நெற்செய்கை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் பயிற்றை, பூசணி, அவரை, கத்தரி போன்ற மரக்கறி வகைளை பயிரிடுவதிலும் நிலக்கடலை போன்வற்றைப் பயிரிடுவதிலும் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

இப்பயிர்ச் செய்கையின் மூலம் தமக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடிவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (03)

## கால்நடைகளைக் கடத்தியவர்கள் மல்லாவிப் பொலிஸாரால் கைது

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு சுதந்திரபுரம் பகுதியிலிருந்து மல்லாவிக்கு சட்டவிரோதமாக கால்நடைகளைக் கடத்திச் சென்ற இருவர் மல்லாவிப் பொலிஸாரால் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள சுதந்திரபுரம் பகுதியில் பல்வேறு குறிகளை உடைய க்ால்நடைகளை சட்டவிரோதமான முறையில் கடத்திச் சென்றவேளை இவ்விருவரும் கோட்டைகட்டிய குளம் காட்டுப்பகுதியில் வைத்து மல்லாவிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பான விசாரணைகளை க்ளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (110)

## துண்டி மயானத்தைப் புனரமைக்க மாநகர சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துண்டி மயானத்தை மீள புனர்நிர்மாணம் செய்வதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மயானத்திற்குச் செல்லும் வீதி மற்றும் மயானச் சுற்றாடல் போன்றவையும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. மயான புனரமைப்புக்கான நிதியை விரைவில் ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வி)

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கூடுதலாக விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்களிலும் பயணிகளின் வருகை திடீரென அதிகரித்துள்ளன.

பயணிகளின் வருகை அதிகரிப்பால் இப்பகுதியில் குடிநீர் உட்பட சகல அத்தியாவசிய சேவைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (வி)

# மாணவர்களுக்கு மதிப்பளிப்பது தேசிய ரீதியில் வளர உதவும்

## வலயக்கல்விப்பணிப்பாளர் த.மேகநாதன்

(அம்பலப்பெருமாள்)

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களை மதிப்பளித்து உற்சாகப்படுத்த வேண்டியது எல்லோருடைய பணியாகவும் உள்ளது இதன்மூலம் அவர்கள் தேசிய ரீதியில் வளரமுடியும் என துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மாணவர்த் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டுதல் தேசிய மாகாண மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், துணுக்காய் வலய மாணவர்கள் பின்தங்கிய பகுதிகளிலிருந்து போட்டிகளில் வெற்றியீட்டுவது என்பது வலயத்துக்கு பெருமை சேர்க்கின்றது.

மாணவர்கள் எவ்வளவு நெருக்கடிகள் வழப்பற்றாக் குறை இருந்தாலும் போட்டிகளில் வெற்றியீட்டுவது என்பது மகிழ்வான விடயம்.

வெற்றியீட்டிய மாணவர்களை மதிப்பளிக்க வேண்டியதும் அவர்களை உற்சாகப் படுத்துவதும் எல்லோருடைய பணியாகும். மாணவர்களை உற்சாகப்படுத்தும் போது தான் எதிர்காலத்தில் மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் பெரும் வெற்றிகளை ஈட்டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (121)

## சித்திரத்தேர் நிறுத்த கொட்டகை அமைப்பு

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு, மணற் பகுதி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் கோயிலிற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் சித்திரத் தேரினை நிறுத்திவைப்பதெற்கென ஆலய முன்றலில் புதிய தேர்க்கொட்டகை அமைக்கும் பணிகள் மும்முரமாக இடம் பெற்று வருகின்றது.

சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இத்தேர்க்கொட்டகைக்கான நிதியிணை அவ்வூர் பொதுமக்களும், அடியார்களும் மனமுவந்து வழங்கி வருகின்றனர்.

இதேவேளை இவ்வருடம் இடம்பெறவுள்ள மகோற்சவத்தின் போது அம்பாள் புதிய சித்திரத்தேரில் ஊர்வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (03)

## வீதி திருத்தப்பட்ட போதும் அதிகரித்துவரும் விபத்துக்கள்

(காரைநகர்)

காரைநகர் பிரதான மேற்கு வீதி பல காலமாக திருத்தப்படாதிருந்த நிலையில் தற்போது தார்க் கலவை போடப்பட்டு புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த நிலையில் புனரமைப்பு பணிகளின் போது பல இடங்களில் சிறுகுழிகளையும் ஓரமாக உள்ள பள்ளங்களையும் சரி செய்யாததினால் துவிச்சக்கர வண்டி பிரயாணிகளும் மோட்டார் சைக்கிளில் செல்வோரும் பள்ளங்களில் விழுந்து விபத்துக்குள்ளாகும் நிலை காணப்படுகிறது.

இரவு வேளைகளில் பிரதான வீதியால் செல்லும் வாகனங்களின் மின் விளக்குகள் குறைக்கப்படாததால் பாதசாரிகளும் துவிச்சக்கர வண்டி பிரயாணிகளும் பெரும் பாதிப்புக்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவோர் இவற்றை சரியாக இனங்கண்டு அவற்றை முதலில் செப்பனிட வேண்டும் என அப்பிரதேச மக்களினால் தெரிவிக்கப்படுகிறது. (50)

## கூட்டுறவுச்சங்க ஒன்றிய களஞ்சியம் புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியக் களஞ்சியம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்தகாலப்போரினால் அழிவுகளைச் சந்தித்திருந்த இக்களஞ்சியம் தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் களஞ்சியங்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்ற சூழலில் இக் களஞ்சியம் புனரமைக்கப்படுவதன் மூலம் மக்கள் பெரும் நன்மையடைவார்கள். (121)

## கிளிநொச்சி செல்லும் அரச ஊழியர்கள் பேருந்துகளில் நின்று செல்லும் அவலம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் யாழ்.பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து பஸ்மூலம் கிளிநொச்சி செல்லும் அரச ஊழியர்கள் பெரும் சிரமங்களுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

காலையில் கிளிநொச்சி செல்வதற்காக பஸ்தரிப்பு நிலையத்திற்கு வரும் அரச ஊழியர்கள் கொழும்பு மற்றும் வவுனியா நோக்கிச் செல்லும் பஸ்களிலேயே பயணம் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பயணம் செய்யும் அரச ஊழியர்கள் பஸ்களிலே நின்றவாறே பயணம் செய்யவேண்டியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை பஸ்களின் இருக்கையில் அமர்ந்த அரச ஊழியர்கள்சிலர் எழுப்பட்டு கொழும்பு செல்லும் பயணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவர்கள் இருக்கையில் இருந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எழுப்பப்பட்ட அரச ஊழியர்களை நின்றே பயணம் செய்ய் வேண்டும் என்று பஸ் நடந்துனர்களால் கூறப்பட்டது.

இந்த சம்பவந்தால் ஆத்திரமடைந்த அரச ஊழியர் பஸ்களில் நின்றவாறே பயணத்தை மேற்கொண்டனர். (வி)

## வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக கால்நடைகளுக்கு நோய்த்தாக்கம்

(அச்சுவேலி)

தற்போது யாழ்.குடாநாட்டுப் பிரதேசங்களில் நிலவிவரும் அதிக வெப்பநிலை காரணமாக கால்நடைகளுக்கு அதிகளவில் நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டு வருவதாக கால் நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

ஆடு,கோழி போன்ற விலங்குகள் இவ்வாறு வெப்பத்தினால் அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கும் பலரும் கோழிகள் தூக்க நோய் காரணமாக அதிகளவில் இறப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கால்நடை வளர்ப்போர் தமது கால் நடைகளை இவ்வாறான தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக் கொள் வதற்காக கால்நடை வைத்தியசாலைகளிற்கு அதிகளவில் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.(03)

## நீருடன் வெளியேறும் மீன் குஞ்சுகள்

(அம்பலப்பெருமாள்)

அம்பலப் பெருமாள் குளத்திலிருந்து சிறுபோக நெற்செய்கைக்காக வாய்க்காலூடாக வரும் நீருடன் மீன் குஞ்சுகள் வெளியேறி அவை வயல் நிலங்களில் இறந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் குளத்தில் இனப்பெருக்கத்துக்காக விடப்பட்ட மீன் குஞ்சுகள் வயல்நிலங்களுக்கு நீர்பாய்க்கப்படுகின்ற போது நீருடன் வெளியேறி இறந்த நிலையில் காணப்படுகிறது.

எனினும் குளத்திலிருந்து மீன்கள் வெளியேறாமல் பாதுகாக்கும் முயற்சிகளில் அம்பலப்பெருமாள் குளம் கமக்கார அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர். (121)

## உவராகும் குஞ்சுக்குளம் கிராமம் பயிர்ச்செய்கை காணி வழங்க கோரிக்கை

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின் குஞ்சுக்குளம் கிராமம் உவரடைந்து இருப்பதன் காரணமாக இக்கிராம மக்கள் தமக்கு நிவாரண உதவியுடன் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய காணிகளையும் வழங்கி உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொன்மையான இக்கிராமம் தற்போது உவர் அடைந்துள்ளது. குடிநீர் கிணறுகள் உவர்நீராக மாறியுள்ளன. இக்கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து உவரில்லாத இடங்களில் குடியேறியுள்ளனர்.

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் நிலங்கள் உவருடன் கூடிய சதுப்பு நிலங்களாக மாறியுள்ளன.

இந்நிலையில் இக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள 50 குடும்பங்கள் அரச நிவாரண உதவியுடன் பயிர்ச் செய்கைக்குரிய இடங்களையும் கோருகின்றன. (121)

### வாகன ஒலி தொடர்பில் புதிய சட்டதிட்டங்கள்

வாகனங்களில் இருந்து வெளியேறும் ஒலி தொடர்பில் புதிய சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

உத்தேச சட்டங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து பின்னர் சுற்றாடல் அமைச்சரிடம் ஒப்படைக்க எண்ணியுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் சரித்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை வங்கியினால் சுயதொழில் கடனுதவி

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளில் இலங்கை வங்கியினால் சுயதொழில் கடன் உதவித்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இலங்கை வங்கியின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்களில் சுயதொழிலை மேம்படுத்த இயலாதவர்கள் வங்கியில் தகுந்த ஆதாரங்களை சமர்ப்பித்து கடனுதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. (101)

## தொலைபேசி பற்றரி மின் ஏற்ற 10 ரூபா

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவில் பல இடங்களில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் கற்சிலை மடு பிரதேசத்திற்கு மின்சாரம் இல்லாததால் மக்கள் கையடக்கத்தொலைபேசிப் பற்றறியை மின நிரப்புவதற்கு 10 ரூபா கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். (101)

## ஆனையிறவு வீதியை அகலமாக்கும் நடவடிக்கை

(அம்பலப்பெருமாள்)

ஆனையிறவு வீதி தற்போது அகலமாக்கப்பட்டு வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக முழுமையாக வீதிப் புனரமைப்புப் பணிகள் எதுவும் நடைபெறாத காரணத்தினால் பெரும் சேதமடைந்திருந்த இவ்வீதி தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு வந்தது.

தற்போது இவ் வீதியூடான போக்குவரத்து நெருக்கடியினைக் கருத்தில் கொண்டு இவ் வீதி அகலமாக்கப்பட்டுப் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. (121)




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வருடாந்த பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட திருதிருமதி பாலகுமார் மரியநாயகி மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் விழாவில் இடம்பெற்ற கலைநிகழ்வையும் காணலாம். (109)

# ஆனைக்கோட்டை வைத்தியசாலைக்கு வைத்தியரை நியமிக்க கோரிக்கை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையில் இயங்கி வரும் மானிப்பாய் அரசினர் வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்களின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி, வைத்திய பரிசோதனை என்பன சிறந்த முறையில் செயற்பட்டு வந்தது.

இந்நிலையில் இங்குள்ள நிரந்தர வைத்தியர் ஓய்வுபெற்றுச் சென்றதை அடுத்து கடந்த 6 மாத காலமாக மாலை வேளையில் மட்டும் பதில் வைத்தியர் ஒருவர் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணி வரை கடமையாற்றி வருகின்றார்.

இதனால் மிகவும் வறிய நிலையில் வாழும் இப்பிரதேச மக்கள் காலை வேளையில் சிகிச்சை பெற முடியாமல் காத்திருக்கவேண்டிய நிலை காணப்படுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக வைத்திய சாலை அபிவிருத்தி சபையினரும், ஏனையோரும் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியும், வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படும் வரை இந்த அவலநிலை தொடரும் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (104)

# பாடசாலைத் தகவல்களை ஆவணப்படுத்தி பேணுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடைபெறுகின்ற செயற்பாடுகள் மற்றும் கற்றல் நிகழ்வுகளுடன் தொடர்புடைய விழாக்கள் தொடர்பான தகவல்கள் புகைப்படங்களுடன் கூடிய வகையில் ஆவணப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும் என யாழ். வலய அதிகாரிகளினால் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெறுகின்ற பல செயற்பாடுகள் உரிய முறையில் ஆவணப்படுத்தப்படாமையினால் அவை தொடர்பான முழுமையான தகவல்களைப் பெறமுடியாது போகின்றது.

இதனால் எதிர்காலத்தில் சில நம்பிக்கையீனங்கள் ஏற்படக்கூடும். எனவே இவற்றை தவிர்த்துக்கொள்ளும் வகையில் முக்கிய ஒவ்வொரு நிகழவுகளையும் புகைப்படங்களாகவும், காணொளிப் படங்களாகவும் அறிக்கை வடிவிலும் ஆவணப்படுத்திப் பேணவேண்டும்.

இதன்மூலம் எதிர்காலத்தில் அப்பாடசாலைகள் தொடர்பான சரியான மதிப்பீட்டினை மேற் கொள்ளக்கூடியதாக அமையும் அதிபர்கள் இவ்விடயத்தில் கூடிய அக்கறையுடன் செயலாற்ற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# தென்மராட்சி கலாசாரப் பிரிவின் கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

கலாசார அலுவல்கள் திணைகளத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பிரிவினரால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டியில் பிரதேச மட்ட ரீதியாக வெற்றி பெற்று மாவட்ட மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களது விபரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரை**

**கனிஸ்ர பிரிவு**

க.றதீபா (மட்டுவில் கமலாசினி வித்தியாலம்), த.விமலினி (அல்லாரை அ.த.க.பாடசாலை), க.பிரியங்கா (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு**

பா.பாலினி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), யோ.சிவாஜினி (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்).

**கவிதை**

**கனிஸ்ரபிரிவு**

ந.நிரஞ்சனா (விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), க.அனந்தா (கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை), இ.பிரியங்கா (அல்லாரை அ.த.க.வித்தியாலயம்).

**சிரேஷ்டபிரிவு**

ஆ.கிரிஜா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), இ.ஷமீதா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**சிறுகதை**

**கனிஷ்ர பிரிவு**

க. அனந்தா (கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலை).

**திறந்த பிரிவு**

ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு சாவகச்சேரி), திருமதி அ.கமலாஜினி, க.விமலாஜினி (கொடிகாமம்),

**பாடலாக்கம்**

**திறந்த பிரிவு**

ரஞ்சனா (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), சி.வைரமுத்து (சங்கத்தானை), திருமதி இ.சிவகாமசுந்தரி (மீசாலை).

**கையெழுத்துப்போட்டி**

**கனிஸ்ரபிரிவு**

சி.டயானா, வி.சியாமினி (மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்).

**நாட்டார் கலை கற்றல்**

**திறந்த பிரிவு**

சி.வைரமுத்து (சங்கததானை).

**பாட்டு நயத்தல்**

திறந்த பிரிவு ப.கஜீதா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).



இவ்வாரம் ஆவரங்கால் ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயத்தில் இடம் பெற்ற சுற்றாடல் முகாம் நிகழ்வினை யாழ். வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் நாடாவெட்டி தொடக்கி வைப்பதையும், பொறுப்பாசிரியை திருமதி து.பிரதீபன் அருகில் நிற்பதையும் காணலாம். (03)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(01.08.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
**கர வருஷம்**
**ஆடி 16 ஆம் நாள்.**

இராகுகாலம் 7.33–9.03, சுபநேரம் 12.03 –1.33,
நட்சத்திரம்: ஆயிலியம் காலை 6.20 வரை
மகம் பி.இ 5.08 வரை
திதி: துதியை மு.இ 9.10 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, இரக்க சிந்தை, தேக ஆரோக்கியம், மனச் சந்தோஷம்.

ரிஷபம:– குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம், பணவரவு, இரக்க சிந்தனை, மனமகிழ்ச்சி.

மிதுனம் :– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக சுகம் பாதிப்பு, இரக்க மனப்பான்மை, தியாக உணர்வு.

கடகம்:– குடும்பத்தில் குதூகலம், தியாக உணர்வு, பணவரவு, உடம்பு நலம் பாதிப்பு, மதிப்பு உயர்வு.

சிம்மம்:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, இரக்க சிந்தை, தேக ஆரோக்கியம், ஏமாற்றம்.

கன்னி :– குடும்பத்தில் குதூகலம், தியாக உணர்வு, பணவரவு, உடம்பு நலம் பாதிப்பு, மதிப்பு உயர்வு.

துலாம் :– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சந்தோஷம், தேக ஆரோக்கியம், வீண் அலைச்சல்.

விருச்சிகம்:– குடும்பத்தில் குதூகலம், மனச்சந்தோஷம், பணவரவு, உடல் நலம் பாதிப்பு, பதற்றம்.

தனுசு:– பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சந்தோஷம், தேக ஆரோக்கியம், மனப் பதற்றம்.

மகரம:– பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, அயலவர் தொல்லை, நண்பர் உதவி.

கும்பம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி, இரக்க சிந்தை, பண வரவு, உடல்நலக் குறைவு, தியாக உணர்வு.

மீனம்:– பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், இரக்க சிந்தை, தியாக உணர்வு.

# தோடுகள் அணிந்து செல்வதற்கும் அச்சமுறும் ஆரம்பப் பிரிவு மாணவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அநேகமான பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு மாணவிகள் தோடுகளை அணிந்த செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

அண்மையில் யாழ். நகரை அண்டிய சில பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு மாணவிகளின் தங்கத் தோடுகளைத் திருடர்கள் மிகவும் தந்திரமாக அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து பாடசாலை செல்லும் மாணவிகள் தங்கத்தோடுகள் அணிவதை தவிர்த்து வருகின்றனர்.

பிற்பகலில் பாடசாலை விடும் நேரம் இந்த விஷமிகள் சிலர் ஆரம்பப்பிரிவு மாணவிகளை மிகவும் தந்திரமாக அணுகி, பொய்க்கதைகள் கூறி அவர்கள அணிந்திருந்த தங்க ஆபரணங்களை மிகவும் துணிச்சலுடன் அபகரித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

இப்படிப்பட்ட திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதால், மாணவிகள் மிகவும் விழிப்பாக நடந்து கொள்ளவேண்டும் என்று கல்விச் சமூகத்தினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வி)

# காத்தோட்டிக் காய்க்கு அலைந்து திரிந்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் காத்தோட்டிக் காய்க்கு நேற்றுமுன் தினம் பெரிதும் பற்றாக்குறையும், தட்டுப்பாடும் நிலவிக்காணப்பட்டது.

ஆடி, அமாவாசை விரதத்திற்கு முக்கியமாகப் பயன்படுத்தப் படும் இந்த காத்தோட்டிக்காயைப் பெறுவதற்கு மக்கள் அலைந்து திரிந்தனர்.

திருநெல்வேலிச் சந்தையில் இந்த காத்தோட்டிக்காய் ஒன்று 20 ரூபாவாக விற்கப்பட்டது. ஆடி மாதத்தில் காய்க்கும் காத்தோட்டி மரங்களில் இம்முறை காய்கள் குறைந்து காணப்பட்டதாலேயே இதற்குப் பற்றாக்குறை ஏற்படக் காரணம் என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார். (வி)

நானொரு அளவான பொடியனாக் இருக்கேக்க கிளறிக்கல் வேலையெண்டு சொல்லுவினம்.

அப்ப நான் அந்த வேலை மிகமிகக் கஸ்டமான வேலையாக இருக்க வேணுமெண்டுதான் நினைக்கிறனேன்.

அந்தக் கிளறிக்கல் வேலையெண்டறது இப்பவெல்லாம் பெயர் மாற்றம் பெற்றிருக்கு! கிளாக்கர். லிகிதர்.குமாஸ்தா இப்பிடிப் பெயர் மாற்றங்கள் பல பெற்று. பெரு வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த வேலையளைப் பிடிக்கிறதுக்கு படிச்சதுகளெல்லாம் ஏன் படாத பாடுகள் படுதுகள் எண்டது இப்பதான் எனக்குப் புடிபட்டுது.

அப்பிடி ஒரு உத்தியோகம் கிடைச்சுதெண்டால் சும்மா இருந்தே சம்பளம் எடுத்திடலாம்.

இந்த உத்தியோகம் கிளறிக்கல்ல இருக்கேக்க அதுகள் கஸ்டப்பட்டுதுகளோ என்னவோ நான் பெலத்த கஸ்டமான வேலையாத்தான் இருக்குமெண்டு ஏமாந்தேனோ என்னவோ?

பேரைப் பாத்தா அப்பிடித்தான நினைக்கவேணும், இல்லையே பாருங்கோ!

கோழி மேச்சாலும் கவுமேந்து வேலை வேணுமெண்டும் அந்த நாளேல சொல்லுறவை. ஏனெண்டா அப்பிடியான ஒருவரைக் கல்யாணம் கட்டி வைச்சா அவருக்கு ஒரு வில்லங்கம் வந்து போயிட்டாக்கூட கவுமேந்து குடுக்கிற பென்சனில குடும்பம் வாழுமெண்டுதான் அப்புடி மாப்பிளையளைத் தேடிப் பிடிச்சுக் கட்டி வைக்கிறவபோல!

நான் சும்மா இருந்து சம்பளம் எடுக்கலாமெண்டேன் சொன்னனானெண்டா. உந்த அரசாங்கக் கந்தோருகளில போய்ப் பாருங்கோ!

ஆளுக்கொரு மேசை கதிரைபோட்டுக்கொண்டு வேலையே செய்யுதுகள். நேரத்தைப் போக்குறதுக்காக கொண்டுவாற புத்தகங்களை வாசிக்குங்கள். இல்லாட்டி எல்லாரும் ஒருவற்றை மேசைக்குக் கிட்டப் போய் நிண்டோ இருந்தோ ஊர் வம்பளக்கிறதுதான் வேலை!

ஒண்டும் தெரியாத பரதேசியள் ஏதும் அலுவலல்களைச் செய்யிறண்டா ஒருநாள் போய் நிண்டு தூங்கிப்போட்டு சும்மா திரும்பவேணும்.

இப்பிடி ஒரு மணிநேரத்தில செய்து முடிக்கிற அலுவலுக்கு ஒரு கிழமை அலைஞ் சுலைஞ்சுதான் காரியம் முடியும்.

இப்ப உந்த வேலையளுக்கு ஆம்புளையளைவிடப் பொம்புளையள்தான் கூட! அதுகள் தான் இப்ப படிக்கிறதும் கூடவா இருக்கு!

அதால அதுகள் தங்களை அலங்காரம் செய்து கொள்வதும். நேரத்துக்கு நேரம் சாப்பிடுறதிலையும் பொழுதப் போக்கிட்டு சரியா 'டாண்" என்று நேரத்துக்கு முன்பாகவே வீட்டுக்கு நடையைக் கட்டீடுதுகள்.

வேலை இல்லேண்டு பட்டதாரிகள் ஒரு பக்கம் போராட்டம். வேலை கிடைச் சதுகள் அலுவலகங்களில நேரத்தைப் போக்கீட்டுப் போகுதுகள். இதாலதான எங்கட நாடு பின்தங்கிக் கிடக்கு இல்லையே பின்னே?



# ஸ்ரார் ஒவ் வடமராட்சிக் கிண்ணம் நியூபவர் அணி கைப்பற்றியது!


நியூபவர் அணி


இளைஞர் அணி

(நெல்லியடி)

மின்னொளியில் நடத்தப்பட்ட ஸ்ரார் ஒவ் வடமராட்சிக் கிண்ணத்தை சிலோஜனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் நியூபவர் அணி கைப்பற்றியது.

நியூபவர் விளையாட்டுக்கழகத்தி-னால் 12 ஓவர் கொண்ட ஸ்ரார் ஒவ் வடமராட்சிக் கிண்ணம் மின்னொளியிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன் தினம் இரவு குஞ்சர்கடை மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் நியூபவர் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூபவர் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இவ்வணி 12 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிலோஜன் 21, கோபி 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புவி, தரன், சைமன் பிரசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

100 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இளைஞர் அணி. ஆனால், நியூபவர் அணியின் சிலோஜன், காந்தரூபன் ஆகியோரின் பந்து வீச்சில் ஓட்டங்கள் எடுப்பதற்கு இமையாணன் இளைஞர் அணி தடுமாறியதுடன் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இதனால் 12 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களுக்குள் சுருண்டது இமையாணன் இளைஞர் அணி. இதில் சுலோஜன் 4, காந்தரூபன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

2011ஆம் ஆண்டிற்கான வடமராட்சி ஒவ் ஸ்ரார் அணியாக நியூபவர் அணி தெரிவு செய்யப்பட்டு 5000 ரூபா பெறுமதியான காசோலையும், வெற்றிக் கிண்ணமும், இரண்டாமிடத்தைப் பெற்ற இமையாணன் இளைஞர் அணிக்கு 2000 ரூபா காசோலையும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது.

ஆட்டநாயகனாக நியூபவர் அணியைச் சேர்ந்த சிலோஜனும், தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த காந்தரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன், விருந்தினர்களாக நெல்லியடி பொலிஸ் அதிகாரி கே.எம். டபிள்யூ. கங்கார, 19ஆவது படைப் பிரிவின் அதிகாரி புத்ததாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (12)

## வடமாகாண கரப்பந்தாட்டத் தொடர் 2 பிரிவிலும் யாழ். மாவட்டம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அணிகளுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளிலும் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியுள்ளது.

இப்போட்டித் தொடர் நேற்றும் நேற்று முன்தினமும் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் மோதின.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின. அதிரடியான புள்ளிகளைப் பெற்ற யாழ். மாவட்ட அணி விரைவான ஆட்டத் திறனையும் வெளிப்படுத்தியது. இறுதியில் யாழ். மாவட்ட அணி 25 : 14, 25 : 17, 25 : 19 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதின. மிகவும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட அணி, விரைவாக புள்ளிகளைப் பெற்றுக் கொணடது. இறுதியில் யாழ். மாவட்ட அணி 25 : 12, 25 : 19 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.




## விலகல் கிண்ணக் கால்பந்தாட்டம் அரியாலை, சென் அன்ரனீஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் விலகல் கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட தொடரின் முதல் சுற்றுப் போட்டியில் அரியாலை மற்றும் சென் அன்ரனீஸ் அணிகள் வெற்றிபெற்றன.

யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கிடையிலான விலகல் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் உரும்பிராய் விக்னேஸ்வரா அணியும், அரியாலை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் போட்டி நிறைவடையும் வரை கோல் எதனையும் போடவில்லை. இதனைத் தொடர்ந்து சமனிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் முதல் வழங்கப்பட்ட சமநிலை உடைப்பில் இரு அணிகளும் 5-5 என்ற கோல் கணக்கில் மீண்டும் சமநிலை பெற்றன. தொடர்ந்து வழங்கப்பட்ட சமநிலை உடைப்பின் மூலம் 1-1 என்ற இரு அணிகளும் சமநிலை பெற்றன.

இதனைத் தொடர்ந்து மூன்றாவது தடவையாக வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு மூலம் அரியாலை அணி ஒரு கோலைப் போட, உரும்பிராய் விக்னேஸ்வரா அணி கோல் போடும் வாய்ப்பை தவறவிட்டது. இதனால் 7-6 என்ற கோல் கணக்கில் அரியாலை அணி பெற்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாசையூர் சென் அன்ரனீஸ் அணியும், குருநகர் சென் றோக் அணியும் மோதின. இதில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென் அன்ரனீஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை நேரம் போட்டிகள் நடைபெறுவதால் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## சிறுவர்களுக்கான விளையாட்டு விழா

(புதுக்குடியிருப்பு)


பரந்தன் கோரக்கன்கட்டு கிராம பொதுநோக்கு மண்டப மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் 13 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான விளையாட்டு விழா இடம்பெற்றது.

இதில் 100 மீற்றர் ஓட்டம், பழம் பொறுக்குதல், சங்கீதக் கதிரை, வேடம் இடல், வினோத உடைப் போட்டிகள் போன்ற போட்டிகள் நடைபெற்றது.

சிறார்களை மகிழ்ச்சியூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விளையாட்டு விழாவில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை உயிரொளி இயக்குநர் அருட்தந்தை பிரபாகர், அப்பகுதி கமக்கார அமைப்புத் தலைவர் செல்வா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இப்போட்டி நிகழ்வில் சிறுவர்களின் பெற்றோர், கிராமப் பெரியோர், ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (40)

## மழலைகள் விளையாட்டு விழா





(நெல்லியடி)

வடமராட்சி வலய மழலைகள் விளையாட்டு விழா நேற்று யாழ். நெல்லியடி, மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. வடமராட்சியிலுள்ள முன்பள்ளி மாணவர்கள் சுமார் 1000 பேர் இதில் கலந்து கொண்டனர். இப்போட்டி வலய ரீதியில் நடாத்துவது இதுவே முதல் தடவையாகும்.

இதன் போட்டி முடிவுகள் வருமாறு: பிராணிகள் ஓட்டம் முதலாமிடம் வடமராட்சி தெற்கு மேற்கு நெல்லியடி பிரதேச சபை முன்பள்ளி, இரண்டாமிடம் தென் இந்திய திருச்சபை முன்பள்ளி, மூன்றாமிடம் கலைவாணி முன்பள்ளி.

உணவு சேகரித்தல்: முதலாமிடம் புனித சவேரியார் முன்பள்ளி, இரண்டாமிடம் மக்கள் படிப்பகம் முன்பள்ளி, மூன்றாமிடம் வீரகத்தி விநாயகர் முன்பள்ளி.

கதிரைச் சவாரி : முதலாமிடம் ஸ்ரீ மித்திரன் முன்பள்ளி, இரண்டாமிடம் கோவிற்கடவை முன்பள்ளி, மூன்றாமிடம் சர்வோதயம் முன்பள்ளி.

பழம் பொறுக்கி வைத்தல் : முதலாமிடம் வடமராட்சி தெற்கு மேற்கு நெல்லியடி பிரதேச சபை முன்பள்ளி, இரண்டாமிடம் திக்கம் பாலர் பாடசாலை, மூன்றாமிடம் கலைமகள் முன்பள்ளி. தேனீர் பரிமாற்றம் : முதலாமிடம் ஆதிசக்தி முன்பள்ளி, இரண்டாமிடம் உடுப்பிட்டி விநாயகர் முன்பள்ளி, மூன்றாமிடம் செம்பியன் பற்று முன்பள்ளி.

கோபுரம் அமைத்தல் : முதலாமிடம் வளர்மதி மழலை கல்விப் பூங்கா முன்பள்ளி, இரண்டாமிடம் வடமராட்சி தெற்கு மேற்கு நெல்லியடி பிரதேச சபை முன்பள்ளி, மூன்றாமிடம் கலைமகள் முன்பள்ளி.

பந்து பரிமாற்றம் : முதலாமிடம் கலைமகள் முன்பள்ளி, இரண்டாமிடம் அம்பிகை முன்பள்ளி, மூன்றாமிடம் ஞானசம்பந்தர் கலாமன்றம் முன்பள்ளி.

நுங்கு வண்டிச்சவாரி : முதலாமிடம் விநாயகர் முன்பள்ளி, இரண்டாமிடம் உதயசூரியன் முன்பள்ளி, மூன்றாமிடம் புரட்சி முன்பள்ளி. நண்டு, இறால், மீன் போட்டி : முதலாமிடம் உதயசூரியன் முன்பள்ளி, இரண்டாமிடம் வேதராணியேஸ்வரா முன்பள்ளி, மூன்றாமிடம் விக்னேஸ்வரா முன்பள்ளி.


உடற்பயிற்சிப் போட்டி : முதலாமிடம் வடமராட்சி தெற்கு, மேற்கு நெல்லியடி பிரதேச சபை முன்பள்ளி, இரண்டாமிடம் ஞானசம்பந்தர் கலைவாணி முன்பள்ளி, மூன்றாமிடம் சன்மார்க்க முன்பள்ளி.

கயிறு இழுத்தல் : முதலாமிடம் வடமராட்சி தெற்கு மேற்கு நெல்லியடி பிரதேச சபை முன்பள்ளி, இரண்டாமிடம் சென் தோமஸ் முன்பள்ளி, மூன்றாமிடம் வள்ளுவர் முன்பள்ளி. (12)

...த்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



## மக்களுக்கு உதவ கால்பந்தாட்டம்



(சிலி)

கடந்த வருடம் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி சிலியில் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக பார்சிலோனா கால்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் லயனல் மெஸி சில நாட்டிற்குச் சென்றுள்ளார். அங்கு பல்வேறு கழகங்களுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது. எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான போட்டிகளில் தான் பங்கேற்கவுள்ளதாக ஊடகவியலாளர் சந்திப்பில் மெஸி தெரிவித்தார்.

# ஒலிம்பிக் போட்டியை நடாத்த தயாராகிறது லண்டன் நகரம்

(புதுடில்லி)

ஒலிம்பிக் போட்டி தொடங்க ஒரு ஆண்டுக்கும் குறைவான நாட்களே உள்ள நிலையில், லண்டன் நகரம் போட்டியை நடத்தத் தயாராகிவிட்டது.

லண்டனில் 30வது ஒலிம்பிக் போட்டி, எதிர்வரும் 2012, ஜூலை 27 இல் துவங்க உள்ளது. இதன் தொடக்கவிழாவுக்கு ஒரு ஆண்டுக்கும் சற்று குறைவாக நாட்களே உள்ளன. இந்நிலையில் கட்டுமானப் பணிகள் 90 சதவீதம் வரை முடிந்துள்ளன.

அண்மையில் ரூ. 1952 கோடியில் தயாரான நீச்சல் மைதானத்தை திறந்து வைத்த, சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர் ஜாக்ஸ் நீச்சல் தடாகம் ரோகி குறித்து கூறியதாவது:

எனது வாழ்க்கையில் பல மைதானங்களை பார்த்துள்ளேன். ஆனால், இந்த நீச்சல் மைதானத்தை பார்த்தவுடன் அதிர்ச்சியாகி விட்டேன். அந்தளவுக்கு பிரமாண்டமாக அமைந்துள்ளது. இதேபோல மற்ற மைதானங்களின் வேலையும் நிறைவடையும் நிலையில் உள்ளது. குறிப்பிட்ட நேரத்தில், குறித்த பட்ஜெட்டில், சிறந்த தரத்தில் உருவாகியுள்ளது. இந்த ஒலிம்பிக் சிறப்பாக அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை எனக்கூறினார்.




தொடக்கவிழா நடக்கும் 80 ஆயிரம் பேர் அமரும் வசதி கொண்ட மைதானம், 2012 மார்ச்சில் தயாராகிறது. இதில் தடகள பாதைகள் அமைக்கும் பணிகள் மே மாதத்தில் முடிவுற்று, சோதனை ஓட்டம் தொடங்கவுள்ளது. 17 ஆயிரம் வீரர்கள் தங்கும் வகையிலான ஒலிம்பிக் கிராமம், இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடைகிறது.

அண்மையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த பயங்கரவாத தாக்குதல் லண்டன் மக்களை சற்று கவலை கொள்ளச் செய்திருக்கிறது. இதுகுறித்து தேசிய ஒலிம்பிக் பாதுகாப்புக் குழுவின் இணை இயக்குனர் கிறிஸ் அல்லிசன் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் இருக்கும் என்று எதிர்பார்த்துள்ளோம். இருப்பினும், அவற்றை முறியடிக்கவும் தயாராக உள்ளோம், என்றார்.

கடந்த 2008 ஒலிம்பிக், சீனாவின் பீஜிங்கில் நடந்த போது, பிரமாண்டமான தொடக்கவிழாவை பார்த்து உலகமே வியந்தது. இதனால் லண்டன் மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், தொடக்கவிழா குறித்து எவ்வித தகவல்களையும் தெரிவிக்காமல், ரகசியம் காத்து வருகின்றனர்.

இது தவிர, ஸ்லம்டாக் மில்லியனர் என்ற படத்துக்காக ஆஸ்கர் விருது வென்ற இயக்குனர் டேனி போயல் தான், நிகழ்ச்சித் தொகுப்பாளராக செயற்பட்டு வருவதாக தெரிகிறது. இத்துடன் உலக மக்களின் மனம் கவர்ந்த இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், தொடக்கவிழாவுக்கு இசையமைக்கின்றார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அவுஸ்ரேலியாவுடனான ருவென்ரி 20 காயம் காரணமாக லசித் மலிங்க அவுட்



(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான சர்வதேச ருவென்ரி 20 கிரிகெட் போட்டிகளுக்கான இலங்கை அணியின் உபதலைவர் பொறுப்பு சகலதுறை வீரரான எஞ்சலோ மத்தியூஸுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திலகரத்ன டில்சான் தலைமையிலான 16 வீரர்களைக் கொண்ட இந்தக் குழாமில் வேகப்பந்து வீச்சாளர்களான லசித் மலிங்க மற்றும் தில்ஹார பெர்ணான்டோ ஆகிய இருவருமே இடம்பெறவில்லை

இந்த இரண்டு போட்டிகளும் ஆறாம் மற்றும் எட்டாம் திகதிகளில் கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் படி அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ருவெ்ன்ரி 20 போட்டிக்கான இலங்கை அணி விபரம் வருமாறு:- டில்சான் (தலைவர்), சங்கக்கரா, மஹேல ஜெயவர்த்தன, சந்திமால், மத்தியூஸ், ஜீவன் மென்டிஸ், தில்ருவான் பெரேரா, திசார பெரேரா, தமிகா பிரசாத், சுரங்கா லக்மல், அஜந்த மென்டிஸ், குலசேகரா, ரந்தீவ், ஹெராத், சமர சில்வா, ‘மிந்தா எராங்கா.

## செனகல் கால்பந்தாட்ட வீரருக்கு ஐந்தாண்டு கால போட்டித் தடை

செனகல் கால்பந்தாட்ட வீரர் எல் ஹட்ஜி டியோப்பிற்கு ஐந்தாண்டு கால போட்டித் தடை விதிக்கபபட்டுள்ளது. செனகல நாட்டில் கால்பந்தாட்டம் சார்பான எந்தவொரு விடயத்திலும் ஈடுபடக் கூடாது என ஹட்ஜிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஹட்ஜி ஐரோப்பாவின் முன்னணி கால்பந்தாட்டக் கழகங்களில் ஒன்றான பிளக்பார்னில் அங்கம் வகித்து வருகின்றார். ஆபிரிக்க கால்பந்தாட்டத்துறை ஊழல் மோசடி மிக்கது என அண்மையில் ஹட்ஜி வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



ஹட்ஜி செனகல் நாட்டில் கால்பந்தாட்டம் சார்பான விடயங்களில் ஈடுபடக் கூடாது என அந்நாட்டு கால்பந்தாட்டப் பேரவை அறிவித்துள்ளது. ஆபிரிக்காவின் ஒட்டுமொத்த கால்பந்தாட்டத்துறையுமே ஊழல் மோசடி மிக்கது என ஹட்ஜி தெரிவித்திருந்தார்

## மீண்டும் தங்கம்

(பீஜிங்)

சீனாவின் ஹாங்காய் நகரில் நடக்கும் பினா உலக நீச்சல் நீர் விளையாட்டு சம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் 100 மீட்டர் பட்டர்பிளை பிரிவில், அமெரிக்காவின் நட்சத்திர வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் நேற்று தங்கப்பதக்கம் வென்றார்.

ஹாங்காய் போட்டியில் அவர் பெறும் 3ஆவது தங்கப் பதக்கம் இது. அவர் ஏற்கனவே 200 மீ. பட்டர்பிளை மற்றும் 4X200 மீ. பிரீஸ்டைல் ரிலே பிரிவுகளில் தங்கம் வென்றிருந்தார். பெல்ப்ஸ் இதுவரை 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் என மொத்தம் 6 பதக்கங்களை வென்றுள்ளார்.

## ருவென்ரி 20 தொடரில் பங்கேற்க இலங்கை வந்தது அவுஸ்ரேலியா

(கொழும்பு)

இலங்கை அணியுடனான சர்வதேச ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்ரேலிய அணியினர் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்தனர்.

கெமரூன் வைட் தலைமையிலான அவுஸ்ரேலிய அணிக்கு ஷேன் வட்சன் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரட் ஹடின், பிரட் லீ, ஷோன் மாஸ் மற்றும் மிச்சேல் ஜான்சன் ஆகிய சிரேஷ்ட வீரர்கள் இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி பல்லேகலே முத்தையா முரளிதரன் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது போட்டியும் அதே விளையாட்டரங்களில் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. திறமைகளை வெளிப்படுத்துவதற்கு தமது அணி வீரர்களுக்கு இந்த தொடர் சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநர் ரிம் நில்சன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## ஹட்ரிக் சாதனை படைத்தார் புரோட்



(டிரெண்ட்பிரிட்ஜ்)

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் புரோட் தொடர்ந்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார்.

88ஆவது ஓவரில் 3ஆவது பந்தில் ஸ்டுவர்ட் பந்து வீச்சில் அண்டர்சனிடம் பிடி கொடுத்து தலைவர் டோனி (5 ரன்) ஆட்டம் இழந்தார். அடுத்து களம் இறங்கிய ஹர்பஜன்சிங் அடுத்த பந்திலேயே எல்.பி.டபிள்யூ ஆனார். இதைத் தொடர்ந்து களம் கண்ட பிரவீன்குமார் அவர் சந்தித்த முதல் பந்திலேயே போல்டானார். இதன் மூலம் தொடர்ந்து 3 விக்கெட்டுகளை வீழ்த்திய புரோட் டெஸ்ட் போட்டியில் ஹட்ரிக் சாதனை படைத்த 12ஆவது இங்கிலாந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றார். உலக அளவில் டெஸ்ட் போட்டியில் நடந்த 38ஆவது ஹட்ரிக் நிகழ்வு இதுவாகும்.


## மீண்டெழுவாரா ஹர்பஜன்?

(மும்பை)

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்தியாவின் ஹர்பஜன்சிங் மீண்டு வருவார் என, இந்திய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் சலீம் துரானி நம்பிக்கை தெரிவித்தார். இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட, டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது. லோர்ட்ஸ் மற்றும் நொட்டிங்காம் டெஸ்டின் முதல் இன்னிங்ஸ் வரை, இந்தியாவின் முன்னணி சுழற் பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், 240 ரன்கள் கொடுத்து 3 விக்கெட் மட்டுமே வீழ்த்தியுள்ளார். இது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே ஹர்பஜனுக்கு ஆதரவு தெரிவித்து சலீம் துரானி (76) கூறியது:

ஒவ்வொருவரின் கிரிக்கெட் வாழ்க்கையிலும் சோகமான காலம் இருக்கத்தான் செய்யும். இந்திய அணியின் சிறந்த பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங், இப்போது சிக்கலான நிலையில் உள்ளார். இந்த நேரத்தில் அவரது திறமை மீது சந்தேகம் கொள்ளக்கூடாது. லோர்ட்ஸ் டெஸ்டில் இவர் சிறப்பாக செயறபடவில்லை என்பது உண்மை தான். ஆனால், தொடர்ந்து அமைதியாக செயற்பட்டு வரும் ஹர்பஜன், தற்போது நடக்கும் இரண்டாவது டெஸ்டின், இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணிக்கு சிம்ம சொப்பனமாக இருப்பது உறுதி. ஏனெனில், சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 400க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியவர், சிரேஷ்ட வீரர் என்ற முறையில், விரைவில் மீண்டு வரும் திறமை இவரிடம் உள்ளது எனத் தெரிவித்தார்.

## ஏ.டி.பி. ரென்னிஸ் தொடர் அரையிறுதியில் சோம்தேவ் ஜோடி



(லாஸ் ஏஞ்சல்ஸ்)

பார்மர்ஸ் கிளாசிக் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், பிலிப்பைன்சின் டிரிட் கான்ராட் "ஹயு ஜோடி முன்னேறியுள்ளது.

அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில், ஆண்களுக்கான ஏ.டி.பி., பார்மர்ஸ் கிளாசிக் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன், பிலிப்பைன்சின் டிரிட் கான்ராடு "ஹயு ஜோடி, இங்கிலாந்தின் ஜமி முர்ரே, லக்சம்பேர்க்கின் கில்ஸ் முல்லர் ஜோடியை எதிர்கொண்டது.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சோம்தேவ் ஜோடி 6-2, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியில் சோம்தேவ் ஜோடி, இஸ்ரேலின் ஜோனதன், ஆண்டிராம் ஜோடியை சந்திக்கிறது.

# இராஜினாமாவை சமர்ப்பித்தவர்களுக்கு நியமனம் வழங்கச் சந்தர்ப்பமில்லை

## கூறுகின்றார் உபவேந்தர்கள் சங்கத் தலைவர்

(கொழும்பு)

இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்த பல்கலைக்கழகங்களின் கல்விப் பிரிவுத் தலைவர்களுக்கு புதிய நியமனங்களை வழங்க முடியாது என உபவேந்தர்கள் சங்கத் தலைவர் பேராசிரியர் என்.கே.நந்தசேன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகங்களுக்கான சட்ட வரைபுக்கு அமைய நியமனங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடையாது.

பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைய மூன்று வருட கால சேவைக் காலத்திற்காகவே கல்விப்பிரிவுத் தலைவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றது.

இராஜினாமா செய்த விரிவுரையாளர்களுக்கு மீண்டும் புதிய நியமணங்கள் வழங்கப்பட்டால் அந்த பதவியை எதிர்பார்த்துள்ள ஏனையவர்களுக்கு அநீதி ஏற்படும் என்றார்.

எவ்வாறாயினும் கல்விப் பிரிவு தலைவர்களாக செயற்பட்ட விரிவுரையாளர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனத் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

இராஜினாமா செய்த விரிவுரையாளர்களுக்கு பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைய உபவேந்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் புதிய நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறுகையில் கல்விப்பிரிவின் தலைவர்களாக செயற்பட்ட விரிவுரையாளர்களின் நியமனங்களை பல்கலைக்கழக நிர்வாக சபை ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய மீண்டும் புதிதாக நியமனங்களை வழங்க வேண்டிய தேவை கிடையாது எனவும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

# பணி நீக்கப்பட்ட இராணுவத்தினரே சனல் 4 இற்கு சாட்சியமளித்துள்ளனர்

## என்கிறது திவயின

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் சனல்4 ஊடகத்திற்கு சாட்சியங்களை வழங்கியுள்ளதாக திவயின சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. துர்நடத்தை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு முன்னாள் இராணுவ உத்தியோகத்தர்களே தகவல்களை வழங்கியுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக இந்த இரண்டு முன்னாள் இராணுவச் சிப்பாய்களும், சனல்4 ஊடகத்திற்கு தகவல்களை வழங்கியுள்ளனர்.புதுமாத்தளன் பிரதேசத்தில் இராணுவ உத்தியோகத்தர்களை அழைத்து பொதுமக்களை தாக்குமாறு உத்தரவிட்டதாக குறிப்பிடப்படும் தகவல்களில் உண்மையில்லை என மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.


சனல்4 காணொளி தொடர்பில் நேரில் கண்ட சாட்சிகள் கிடையாது என தமது வாதத்தை முறியடிக்கும் நோக்கில் இவ்வாறு புனையப்பட்ட சாட்சியங்களை சனல் 4 முன்வைத்து வருவதாக அவர் குறிப்பிட்டார் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ள தமிழ்த்தேசியம் ஒற்றுமைப்படும் காலம் கனிந்துள்ளது

## -அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு-

(கொழும்பு)

**இன்று தமிழ்த் தேசியம் என்பது இரண்டு கூறுகளாகப் பிரிந்துள்ளது. புலிகளுக்கு ஆதரவான தமிழ்த் தேசியம் ஒன்று மற்றொன்று புலிகளுக்கு எதிரானது. இவ் இரண்டு தேசியக் கொள்கைகளையும் கொண்டு செயற்படுபவர்கள் முதலில் ஒற்றுமைப்பட வேண்டிய காலம் கனிந்திருக்கிறது. என நீதி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ், முஸ்லிம் உறவினை சரியாகப் பேணி எமது சிறுபான்மைச் சமூகங்களுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு நாம் பங்காளர்களாக இருந்து செயற்பட்டோம் தமிழ்த் தேசிய சக்திகளுக்கு மிகப்பெரும் பக்கபலமாக அன்று முதல் இன்றுவரை நாம் இருந்து வருகின்றோம். வட கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மைச் சமூகத்திற்கு நியாயமானதொரு தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் தமிழ், முஸ்லிம் சமூகம் ஒற்றுமைப்படுவதோடு, இச் சமூகத்தினை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைப்புகளும் ஒருமித்து செயற்பட வேண்டும். இந்த யதார்த்தத்தை அறியாமல் புறந்தள்ளிவிட்டு யார் செயற்பட்டாலும் எமது சமூகத்திற்கான நிரந்தரத் தீர்வு கிடைக்காமல் எட்டாக்கனியாக ஆகிவிடும்.

வெறுமனே எமது பிரச்சினைகளை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்துவதால் மட்டும் எமக்கான தீர்வு கிட்டப்போவதில்லை. காலத்தின் யதார்த்த நிலையினை புரிந்து செயற்பட வேண்டும். அந்த வகையில் எமது முஸ்லிம் தேசியக் கொள்கையினை வகுப்பதில் எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முறையானதொரு நடைமுறையினைக் கையாண்டு வருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் கூட்டு அரச தரப்பில் இணைவது பற்றி பல தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. முஸ்லிம் சமூகத்திற்கு நன்மைகள் கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையிலேயேதான் நாம் அரசின் பக்கம் இணைந்தோம். சுயநலத்திற்காக எமது கட்சியிலிருந்த எவரும் செயற்படவில்லை. வரலாறு காணாத மக்கள் ஆணையைப் பெற்ற இந்நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டில் புரையோடிப் போயிருந்த இனப் பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுத்த மாபெரும் சக்தியாக காணப்பட்டார். அதற்காகவே அவர் பக்கம் இணைந்தோம்.

அது மட்டுமல்லாமல் சிறுபான்மைச் சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயற்படும் தலைவராகவும் எமது ஜனாதிபதி திகழ்ந்தார்.

18ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இரண்டுக்கு மூன்று பெரும்பான்மையை பெறுவதில் எமது கட்சியும் ஆதரவினையும் வழங்கி எம் சார்ந்த சமூகத்திற்கு ஏதாவது பெற்றுக் கொடுக்கலாம் என்பதற்காகவே நாம் அரச தரப்பில் இணைந்தோம் என்றார்.

# 2960 முன்னாள் புலிகளே புனர்வாழ்வு முகாம்களில் உள்ளனர்

## -மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க-



(கொழும்பு)

புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 2960 பேருக்கு தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் பொலனறுவை ஆகிய பிரதேங்களில் அமைக்கப்பட்டுள்ள நான்கு நிலையங்களில் இந்த புனர்வாழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

புனர்வாழ்வளிக்கப்படுவோரில் 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட முன்னாள் போராளிகளே அதிகம் அடங்குவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

இவர்களில் ஒரு பகுதியினரை இம் மாதத்தில் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தேசித்துள்ளதாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க மேலும் குறிப்பிட்டார்

# மனிதாபிமான நடவடிக்கை உண்மை அலசல்கள் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை இன்று வெளியீடு

(கொழும்பு)

புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு தயாரித்துள்ள "மனிதாபிமான நடவடிக்கை- உண்மைசார்ந்த அலசல்கள்" என்ற தலைப்பிலான அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது.

ஹில்டன் விடுதியில் காலை 10 மணியளவில் இந்த அறிக்கையை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிடவுள்ளார்.

161 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை, புலிகளுக்கு எதிரான போரின் போதும் அதற்குப் பின்னருமான நாட்டின் நிலைமைகள் குறித்த அரசாங்க முகவரகங்கள் மற்றும் தனிநபர்களினது ஒருங்கிணைந்த அறிக்கையாக அமையவுள்ளது.

இந்த அறிக்கையின் பிரதிகள் அனைத்து நாடுகளுக்கும், கொழும்பிலுள்ள அனைத்து இராஜதந்திர தூதரகங்களுக்கும்,ஐ.நா முகவரகங்கள், உதவி நிறுவனங்கள், மற்றும் ஊடகங்களுக்கும் வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சிறியதொரு குழுவாக இருந்த புலிகள் அமைப்பு வான், கடல்படைப் பிரிவுகளைக் கொண்டதொரு மரபுவழிப் படையாக எவ்வாறு மாற்றம் பெற்று எத்தகைய ஆற்றலைக் கொண்டிருந்தது என்பது குறித்த விரிவான தகவல்களை இந்த அறிக்கை உள்ளடக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் கொலைகள், ஜனநாயகத் தலைவர்களின் படுகொலைகள் பற்றிய விபரங்களும், குடியியல் இயல்பு வாழ்க்கையை புலிகள் எவ்வாறு குழப்பினார்கள் என்பது குறித்தும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

திம்பு தொடக்கம் நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுக்கள் வரை புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்தும் இந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த அறிக்கையில் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தவறான தகவல்களை தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

இந்த அறிக்கையில் உண்மையான-சரியான தரவுகள் உள்ளடக்கப்படவில்லை என்றும் புலிகளைத் தோற்கடிக்கப் பயன்படுத்தப்பட்ட முக்கியமான உத்திகள் தொடர்பான சாட்சியங்கள் இந்த அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டு விட்டதாகவும் அந்த ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது.

குறிப்பிட்ட சில சம்பவங்கள் தொடர்பானதும், சரத் பொன்சேகா உள்ளிட்ட எதிரணி சார்ந்த படை அதிகாரிகளினது பெயர்களும் கூட இந்த அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் மேலும் கூறியுள்ளது.

# பொதுநலவாய அமர்வுகள் அடுத்த வருடம் கொழும்பில்

(கொழும்பு)

பொதுநலவாய நாடாளுமன்றங்களின் சங்கம் தமது 57 ஆவது அமர்வினை நிறைவு செய்துள்ளது. இந்த நிலையில் அடுத்தவருட அமர்வுகள் கொழும்பில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


ஐந்து நாட்களாக லண்டனில் இடம்பெற்ற அமர்வில் 416 பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபானாயார்கள் உட்பட 600 பேர் பங்குபற்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை நாடாளுமன்ற குழுவிற்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமை தாங்கி சென்றிருந்தார்.

நிறைவு தினத்தில் உரையாற்றிய அவர் 58 ஆவது அமர்வு கொழும்பில் இடம்பெறும் போது, பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறந்த முறையில் வரவேற்பளிக்கப்படும் என உறுதியளித்தார்.

இதுதவிர, கடினமான நடவடிக்கைகள் மூலம் இலங்கை பெற்ற சமாதானத்தை உறுதிப்படுத்த சகல பொதுநலவாய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். 1974 மற்றும் 1995 ஆகிய ஆண்டுகளில் பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் அமர்வுகள் இலங்கையில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


பின்வரும் வினாக்களில் உள்ள உருக்களில் ஒன்று ஏதோ ஒரு வகையில் வித்தியாசமானது. அதனை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.

36.




(1) (2) (3) (4)

37.




(1) (2) (3) (4)

38.




(1) (2) (3) (4)

39.




(1) (2) (3) (4)

40.



(1) (2) (3) (4)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்

# கல்வி முரசு


வெளியீடு 25



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


படத்துடன் தொடர்புடைய மூன்று சொற்கள் அடங்கிய விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

01.



1) கண்ணாடி - சுமை - பிரயாணம்
2) சுமை - பிரயாணம் - உடுப்பு
3) பிரயாணம் - சந்தை - உடுப்பு

02.



1) ஆகாயம் - பறத்தல் - செட்டை
2) ஆகாயம் - நடத்தல் - கால்
3) பறத்தல் - செட்டை - தரை

தரப்பட்டுள்ள வினாக்களில் காணப்படும் கோடிட்ட சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்றும் எதிர்க் கருத்துள்ள சொல் ஒன்றும் தருக.

03. பாடசாலை நேரத்துடன் விட்டதால் ரகு ஆனந்தமடைந்தான்

ஒத்த சொல் :...................................... எதிர்ச்சொல் :......................................

04. கிணற்றுக்குச் சமீபமாக விளையாட்டு மைதானம் உண்டு

ஒத்த சொல் :...................................... எதிர்ச்சொல் :......................................

05. தகப்பனாரின் இறப்பு அவனைப் பெரிதும் வாட்டியது.

ஒத்த சொல் :...................................... எதிர்ச்சொல் :......................................

06. மாமரத்தில் எண்ணில்லா பல கனிகள் காணப்பட்டன.

ஒத்த சொல் :...................................... எதிர்ச்சொல் :......................................

07. அவன் தனது நண்பன் வீட்டில் உணவு உண்டான்.

ஒத்த சொல் :...................................... எதிர்ச்சொல் :......................................

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (R) எனவும் பிழையாயின் (W) எனவும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

08. எமது பிள்ளைப் பருவத்தில் வேலைவாய்ப்புத் தேடி அலைய வேண்டும். (...............)

09. உருவங்கள் அமைப்பதற்கு இலகுவான ஊடகம் களிமண் ஆகும். (...............)

10. வர்ணக் கலர்ப்பெட்டி ஒன்றில் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்கள் கட்டாயமாக இருக்க வேண்டும். (...............)

11. பாடசால ஒன்றின் நிர்வாகத்திற்கு வகுப்பாசிரியர் பொறுப்பாக இருப்பார் (...............)

12. ஊறுகாய் செய்தல் எலுமிச்சம்பழத்தைப் பாதுகாக்கும் ஒரு முறையாகும் (...............)

**ஒரு காய்கறி வியாபாரி நான்கு நாட்களில் காய்கறிகளை விற்பனை செய்து பெற்ற பணம் கீழே தரப்பட்டுள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| திங்கள் | - | ரூபா | 706.50 |
| செவ்வாய் | - | ரூபா | 645.00 |
| புதன் | - | ரூபா | 485.50 |
| வியாழன் | - | ரூபா | 839.00 |

13. அவன் நான்கு நாட்களிலும் விற்பனை மூலம் பெற்ற மொத்தப் பணம் எவ்வளவு?

..........................................................................................

14. வியாழக்கிழமை அவன் 650 ரூபாவிற்கு காய்கறிகளை வாங்கினான். அவனது பிரயாணச் செலவு ரூபா 45 ஆயின், அன்று அவன் பெற்ற இலாபம் எவ்வளவு?


..........................................................................................

15. அவன் ஒரு கிலோகிராம் வெண்டியை ரூபா 45 வீதம் வாங்கி கிலோகிராம் 60 ரூபா வீதம் விற்பனை செய்தான். நான்கு நாட்களிலும் அவன் 5 கிலோகிராம் வெண்டியை விற்பனை செய்திருந்தால் அவன் வெண்டி மூலம் பெற்ற இலாபம் எவ்வளவு?

..........................................................................................


**சுற்றாடலில் மிகவும் வியக்கத்தக்க செயல்களை சில அங்கிகள் செய்கின்றன. கீழே இரு படங்கள் உண்டு. அவற்றோடு தொடர்புடைய அங்கியின் பெயரை எழுதுக.**

16.



..............................


17.



..............................


**அடுத்துவர வேண்டிய கோலத்தை வரைக.**

18.



..............................

19.



..............................

**பின்வரும் கடிதத்தை வாசித்துக் கீழேயுள்ள வினாக்களுக்குரிய விடையை எழுதுக.**

கண்டி வீதி,
சாவகச்சேரி,
24.12.2000

அன்புள்ள சுமதி அக்கா,

நான் நலமுடையேன். உங்கள் நலமும் நன்றே ஆக இறைவன் அருள்புரிய வேண்டுகின்றேன். நீண்ட காலமாக உங்களிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை. கடந்த இருவாரமாகப் பரீட்சை நடைபெற்றது. பரீட்சை நன்றாகச் செய்துள்ளேன். பரீட்சை நடைபெற்றதால் கடிதம் எழுத, நேரம் கிடைக்கவில்லை. மன்னிக்கவும்.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள தங்கை,
ராதிகா.

20. இக்கடிதத்தை எழுதியவர் யார்?

..........................................................................................

21. இக்கடிதம் யாருக்கு அனுப்பப்பட்டுள்ளது?

..........................................................................................

22. இக்கடிதம் எங்கிருந்து எழுதப்பட்டுள்ளது?

..........................................................................................

23. கடிதத்தை எழுதியவருக்கும் பெற்றுக்கொண்டவருக்கும் உள்ள உறவுமுறை என்ன?

..........................................................................................

24. இலங்கையில் சாதாரண தபால் மூலம் அனுப்பப்படும் கடிதத்திற்கான ஆகவும் குறைந்த அளவு தபாற் கட்டணம் எவ்வளவு?

..........................................................................................

25. "தபாற் கந்தோர்" என்பதன் ஆங்கிலச் சொல்லை எழுதுக.

..........................................................................................

**பின்வரும் வினாக்களில் சில சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை ஏதோ ஒரு ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி நடுவில் வரும் சொல்லின் கீழ் கோடிடுக.**

26. பூனை, மாடு, யானை, எலி, நாய்

..........................................................................................

27. வெள்ளி, ஞாயிறு, சனி, வியாழன், புதன்

..........................................................................................

28. கிழவன், குழந்தை, வாலிபன், சிறுவன், முதுகிழவன்

..........................................................................................

29. நள்ளிரவு, இரவு, நண்பகல், மாலை, அதிகாலை

..........................................................................................

30. சித்திரை, ஆனி, ஆடி, வைகாசி, ஆவணி

..........................................................................................

**பின்வரும் வினாக்களில் பொருத்தமான முடிக்கும் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

31. ரகு நேற்றுப் பாடசாலை (செல்கின்றான், சென்றான், செல்வான்)

32. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் (நகர்ந்தது, நகர்கின்றது, நகரும்)

33. மழை வெள்ளம் போட்டதால் மரங்கள் (சரிந்தன, சரியுங்கள், சரிந்தது)

34. புகையிலையை வாங்கியவர் (விறுத்துப்பார்த்தார், விரித்துப்பார்த்தார், விழித்துப்பார்த்தார்)

35. நண்பர்கள், உறவினர்களை வீட்டுக்கு அழைத்து உணவு அளிப்பது (அன்னதானம், தருமம், விருந்து)



விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2011 - கல்விமுரசு

# விநோதமான மீன்



ஜப்பானில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த விநோதமான மீன் jelly fish என்றழைக்கப்படுகிறது. இந்த மீன் jelly fish வகையில் ஒன்றாகும். இந்த மீன் தண்ணீரில் இல்லாமல் தரையில் உள்ளது.

# செய்தித்தாள்களாலான வீடு



1922 ஆம் ஆண்டு Elis Stemnan என்பவரால் கட்டப்பட்ட வீட்டை அருகில் காணலாம். முழுக்க முழுக்க செய்தித்தாள் மற்றும் மரக்கட்டைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1,00,000 சுற்றி வைக்கப்பட்ட செய்தித்தாள்களால் உருவாக்கப் பட்டுள்ளது. வீட்டில் உள்ள அனைதது பொருட்களும் செய்தித்தாளில் செய்யப்பட்டுள்ளது.

# இதுவும் ஆபத்துதான்



காய்கறிகளின் விதைகள் மற்றும் கொட்டைகளில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் ஆரோக்கியமானது என்ற எண்ணம் பலருக்கும் இருக்கிறது. ஏனெனில் அவை இயற்கையான காய்கறி பொருட்களில் இருந்து கிடைக்கிறது.

இந்த நம்பிக்கை ஆரோக்கியத்திற்கு அபாயமானது. காய்கறி எண்ணெய் துரித உணவுகள் போலவே ஆபத்தானது. ஏனெனில் ஜங்புட் உணவுகள் எப்படி தயாரிக்கப்படுகிறதோ அது போன்ற முறையிலேயே காய்கறி எண்ணெய்களும் தயாரிக்கப் படுகிறது. காய்கறிகளிலுள்ள சத்துக்கள் எல்லாம் எண்ணெய் தயாரிக்கும் முறையில் நீக்கப் பட்டு விடுகிறது. இறுதியாக எண்ணெய்யாக மிஞ்சி இருப்பது வெறும் கொழுப் புகள் மட்டுமே.

இந்தக்கொழுப்புகள் கல்லீரலை தூண்டி உடலில் அதிகப்படியான கொலஸ்ரோல் உற்பத்தியாக காரணமாக அமைந்து விடுகிறது. தொடர்ந்து அதிகப்படியாக காய்கறி எண்ணெய்களை பயன்படுத்தி வந்தால் சீக்கிரமாகவே கல்லீரலானது உடலின் தேவைக்கு அதிகமான கொலஸ்ரோலை உற்பத்தி செய்துவிடுகிறது.

இது இதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது. பெரும்பாலும் காய்கறி எண்ணெய்கள் மரபு வழி முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இது உடலுக்கு ஏற்றதல்ல. சோயா எண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய், மக்காச்சோள எண்ணெய், முந்திரி எண்ணெய் போன்றவை அதிகமாக மரபு வழியில் தயாராகிறது.

வேறு சில எண்ணெய்கள் அதிகமாக ஹைட்ரஜனேற்றம் செய்யப்பட்டு தயாராகிறது. இப்படி தயாராகும் எண்ணெய்கள் அதிகமாக கொலஸ்ரோல் உருவாக காரணமாக இருப்பதுடன் இரத்தக்குழாய்களை பாதிக்கும். இந்த எண்ணெய்களால் உடலில் அதிகப்படியாக உருவாகும் பலபூரிதமாகாத கொழுப்புகள் இதய வியாதிகள், நீரிழிவு மற்றும் வேறு சில அபாயமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

அதேபோல சுவை தருவதற்காக மேற்கொள்ளப்படும் ரீபைன்ட் முறையானது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் விஷத்தன்மையுள்ள ரசாயனங்கள் சுரப்பதை தூண்டுகிறது. இது இரத்த சுழற்சியை குறைக்கும். மூளை நரம்புகள் இயக்கத்தை பாதிக்கும். ஹோர்மோன் சுரப்பிகளின் செயற்பாடுகளை குறைத்து ஜீரணத்தையும் தாமதப்படுத்தும். எனவே காய்கறி எண்ணெயையும் அளவுடன் பயன்படுத்துவது ஆரோக்கியத்திற்கு நல்லது

# பெண் உருவத்தில் பூக்கள்





தாய்லாந்து நாட்டிலே ஒரு அதிசய மரத்தில் பெண் உருவத்தில் பூக்கள் பூக்கின்றன. இந்த விநோதமரம் Nareepol என்றழைக்கப்படுகிறது. இது தாய்லாந்து நாட்டிலுள்ள பாங்கொக் நகரத்திலிருந்து 500 கிலோமீற்றர் தொலைவில் உள்ள Petchaboon province என்ற இடத்தில் உள்ளது. இந்த மரத்தில் பெண் உருவத்தில் பூக்கள் வளருகின்றன.

அதனால் தான் இந்த மரம் Nareepol எனப்படுகிறது. Naree என்றால் மலாய் மொழியில் பெண் என்றும் Pol என்றால் மரம் என்றும் பொருள் தருகிறது.

# துடுப்பு யோகா

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் பிரபலம் ஆகி வருகின்றது துடுப்பு யோகா. இது SUP ATX யோகா என்று அழைக்கப்படுகின்றது. நீர்நிலைகளில் ஓடும் துடுப்புக்கள் மேல் யோகாசன பயிற்சிகளை மேற்கொள்கின்றனர்.




இத்துடுப்புக்கள் பாய்களின் உருவத்தை கொண்டிருப்பது யோகாசனம் செய்வதற்கு ஏற்ற வகையில் உள்ளன. இது ஒரு புதுமையான அனுபவம், சாதாரண யோகாசனத்தைக் காட்டிலும் மிகுந்த பலனைக் கொடுக்கும் என்கின்றனர் துடுப்பு யோகா. ஆயினும், சாதாரண யோகாவைக் காட்டிலும் கூடுதல் சவால் உடையது என்கின்றார்கள்.

# தடாகத்தின் நடுவே கச்சேரி

பிரித்தானியாவில் உள்ள Edwardian Bramley Baths தடாகத்தின் நடுவே மேடை அமைக்கப்பட்டு இசைக்கச்சேரி நடத்தப்பட்டு உள்ளது. I Love West Leeds கலை விழாவின் முக்கிய அம்சமாக இப்புதுமையான கச்சேரி இடம்பெற்றது.

West Yorkshire Symphony Orchestra இசைக் குழுவினர் இக் கசசேரியை நடத் தினார்கள்.



# ஹார்ட்டிஸ்கினை தனித்தனி பிரிக்க

கணினியில் இயங்குதளத்தினை நிறுவும்போதே தனித்தனிப் பகுதிகளாக வன்தட்டினை பிரித்திருப்போம். ஒரு சிலர் இயங்குதளத்தை நிறுவும் போது முறையாக வன்தட்டினை பிரிக்காமல் விட்டுவிடுவார்கள். அதாவது C மட்டுமே பிரித்து வைத்திருப்பர், அதனால் ஒன்றும் பிரச்சினை இல்லை. எனினும் கோப்புகளை முறையாக கையாள முடியாது. எனவே வன்தட்டினை தனித்தனிப் பகுதிகளாகப் பிரித்து வைத்திருப்பதே சிறந்தது. வன்தட்டினை தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்க நம்முடைய ஆப்ரேட்டிங் சிஸ்ட்டத்திலேயே வழி உள்ளது. ஆனால் அதில் ஒரு சில வசதிகள் குறைவாக உள்ளது. வன்தட்டினை முறையாக பிரிக்கவும். பிரித்த வன்தட்டில் மாற்றங்கள் செய்யவும், இணையத்தில் பல்வேறு மென்பொருள்கள் கிடைக்கிறன. அதில் ஒன்றுதான் இந்த Aomei Dynamic Disk Manager.

தரவிறக்க சுட்டி:- http://dynamic-disk.com/ddm-beta-testing.html

இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி கணினியில் பதிந்து கொள்ளவும். பின் வேண்டியபடி வன்தட்டினை முறைப்படுத்தி கொள்ளவும். இந்த மென்பொருள் பீட்டா பதிப்பாகும். மேலும் இந்த மென்பொருள் மூலம் ஏற்கனவே பிரித்த பகுதியையும் மாற்றியமைத்துக்கொள்ள முடியும். இந்த பீட்டா வெர்சன் ஜீலை 31 வரை மட்டுமே. முழுப் பதிப்பும் ஒகஸ்ட் மாதம் வெளியிடப்புடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணித பயிற்சி மேற்கொள்ள

கணித திறன்களையும் அவற்றின் செயல்முறைகளையும் கற்று கொள்ள சிறுவர்களுக்கும், மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைகிறது REKEN TEST என்ற மென்பொருள்.

இந்த மென்பொருள் மூலம் கணித அறிவின் எளிய பிரச்சினைகளை தீர்க்க முடியும். அதாவது கூட்டல், கழித்தல், பெருக்குதல், வகுத்தல் மற்றும் தசமங்கள், பின்ன பிரச்சினைகள், பணப் பிரச்சினைகள் போன்றவற்றுக்கு அடிப்படை மட்டத்தில் இருந்து பல மட்டங்களில் கற்றுகொள்ள வசதியளிக்கிறது இந்த மென்பொருள். கணித பயிற்சிகளை செய்யும்போது நேர கணிப்பினை இந்த மென்பொருள் வழங்குவ தால் மிக வேகமாக கணித பயிற்சிகளை செய்யும் ஆற்றலை வளர்க்க முடியும்.


வீட்டிலேயே கணிதப் பாடத்தினை கற்றுகொள்ள கண்டிப்பில்லாத கனிவான கணித ஆசானாக இந்த மென்பொருள் செயற்படுகிறது.

தரவிறக்க சுட்டி:- http://www.4x4software.nl/english/index.html

கணினி மூலை

# இலங்கை மீது அமெரிக்க அரசாங்கம் பொருளாதாரத் தடை விதிக்கவில்லை

## கருணாநிதி தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை மீது அமெரிக்கா இன்னும் பொருளாதாரத் தடை விதிக்கவில்லை என்று முன்னாள் முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில்: சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அரசு தீர்மானம் நிறைவேற்றிய காரணத்தால்தான் இலங்கை மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துவிட்டதாக சிலர் பாராட்டுகின்றனர். தொல்.திருமாவளவன்கூட ஓர் அறிக்கையில் அது உண்மையாக இருக்குமோ என்றெண்ணி வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் சிலரிடம் விசாரித்தபோது அப்படி எதுவும் அமெரிக்கா இதுவரை அறிவிக்கவில்லை என்று கூறினர். அமெரிக்க வெளியுறவுத் துறைக்கான குழு, போர்க் குற்றங்களை அடுத்து இலங்கை அரசுக்கு அமெரிக்க உதவிகளை ஒரு வரையறைக்குள் நிறுத்துவதாக உறுதி அளித்துள்ளது. இந்த நடவடிக்கைகூட உடனடியாக அமுலுக்கு வராது.

2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகும் நிதியாண்டில் இலங்கைக்கான உதவி நிறுத்தம் பற்றிய இந்தக் குழுவின் பரிந்துரை, அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட், காங்கிரஸ் என்ற இரண்டு அவைகளிலும் வைக்கப்பட்டு, அவற்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும்.

இந்த ஆலோசனை கடந்த பல வாரங்களாக இக்குழுவின் உறுப்பினர்களால விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சரின் இந்தியச் சுற்றுப் பயணத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மற்ற நாடுகள் குறித்த விவகாரங்களை இந்திய அரசிடம் மட்டும்தான் விவாதிப்பாரே தவிர, இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசிடம் விவாதிக்கமாட்டார். ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்று தெரியாமல் அ.தி.மு.க.வின் தொண்டர்கள் முதல்வர் ஜெயலலிதாவைப் பாராட்டி வருகின்றனர் என்றாா.

## இந்தியச் செய்திகள்

### இந்திய-பங்களாதேஷ் எல்லைப் பாதுகாப்பு

(புதுடில்லி)

இந்தியா - பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையே, எல்லைப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம், பங்களாதேஷிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பங்களாதேஷ் உள்துறை அமைச்சர் சகாரா காடூனை சந்தித்து, இருதரப்பு உறவு, எல்லைப் பாதுகாப்பு, எல்லை மேலாண்மை ஆகியவை தொடர பாக பேச்சு நடத்தினார். இரண்டரை மணி நேரச் சந்திப்புக்குப் பின், இரு தரப்புக்கும் இடையே, எல்லைப் பகுதி மேலாண்மையின் தரத்தை மேம்படுத்துவது, எல்லைப் பாதுகாப்பை உறுதி செய்வது ஆகிய முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

# இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றில் குரல் எழுப்புவோம்

## தமிழக முதல்வர் உறுதி



(சென்னை)

இலங்கைப் பிரச்சினையை நாங்கள் நாடாளுமன்றத்தில் எழுப்புவோம் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க.வின் தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜெயலலிதா, தி.மு.க.வினர் மீது பழிவாங்கும் நோக்கோடு இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தமிழகம் முழுக்க ஆயிரக்கணக்கான மோசடிப் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அந்தப் புகார்கள் மீதே நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மு.க.ஸ்டாலின் கைது செய்யப்படவில்லை. ஸ்பெக்ட்ரம் விவாகரத்தில் ஆ.ராசா நீதிமன்றத்தில் உள்துறை அமைச்சர் சிதம்பரம், பிரதமர் ஆகியோரின் பெயர்களைக் கூறியுள்ளார். அந்தவகையில் பிரதமரும், உள்துறை அமைச்சரும் இதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். என்றார்.

இலங்கை விவாகரம் தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த ஜெயலலித, எங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசு தொடர்பாக தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவார்கள். இலங்கைப் பிரச்சினை மட்டுமல்ல சட்டவிரோதமாக இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவை திரும்பப்பெறுவது தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவார்கள் என்றார்.

# நடிகர் விஜய்யிடம் யாருமே கையெழுத்துக் கேட்கவில்லை

(சென்னை)

நடிகர் விஜய்யிடம் யாருமே கையெழுத்து கேட்கவில்லை என்று அவரது தந்தையும், இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகர் மறுப்பு தெரிவித்துள்ளார். கடந்த வாரம் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நடந்த கையெழுத்து இயக்கத்தில் நடிகர் விஜய் கையெழுத்து போட மறுத்த செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சந்திரசேகர் இது தொடர்பாகக் கூறுகையில்-


விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் யாரும் எங்களிடம் கையெழுத்து கேட்கவில்லை. அரசியல் காரணங்களுக்காக பரப்பப்படும் செய்தி இது. இளைய தள



பதி விஜய்யை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக யாரும் சந்திக்கவில்லை. யாரிடமும் கையெழுத்துப் போட மாட்டேன் என விஜய் சொல்லவும் இல்லை. இலங்கை மக்களை மிகவும் நேசிப்பவர் விஜய். தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ அவர் வழி செய்வார் என்று கூறினார்.

# உரிய விசாரணை நடத்துவதன் மூலமே தமிழர்களின் இதயங்களை வெல்லலாம்

## பிரகாஷ் கரட் தெரிவிப்பு



(சென்னை)

குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துவதன் மூலம் தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியும் என இந்திய கம்யூனிச கட்சியின் செயலாளர் பிரகாஷ் கரட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச் சார்பற்றதுமான உயர்மட்ட விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகம் களையப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும், யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி ஒட்டுமொத்த இலங்கையிலும் அதிகார ஆட்சி முறைமை நீடித்து வருகின்றது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேலும் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கை இளைஞர் தூத்துக்குடியில் கைது

(சென்னை)

தூத்துக்குடியிலிருந்து போலி ஆவணங்கள் மூலம் கப்பலில் இலங்கைக்கு வர முயன்ற இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இலங்கையைச் சேர்ந்த வைகுந்தன் (வயது-39) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு குடும்பத்துடன் இவர் இந்தியா சென்றதாகவும், கொழும்பு திரும்பி கட்டார் நாட்டுக்கு வேலைக்குச் செல்ல இவர் முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் போலியான கடவுச் சீட்டு மற்றும் இருப்பிடச சான்றிதழ்களை சமர்ப்பித்தாகக் கூறியே கைது செய்யப்பட்டுள்ளார்.

# பண்டைய இந்தியா குறித்து ஆராய்வதற்கு ராமாயண காலத்தினை ஆராய வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவிப்பு



பண்டைய இந்தியா குறித்து அறிவியலாளர்களும் மொழி அறிஞர்களும் ஆராய்ச்சி நடத்த வேண்டும், குறிப்பாக இராமாயண காலத்தையும் அதனுடன் தொடர்புள்ளதாகக் கூறப்படும் இடங்களையும் எல்லா கோணங்களிலும் ஆராய வேண்டும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வலியுறுத்தினார்.

கிறிஸ்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை அறிவியல்பூர்வமாக ஆராய்வது தொடர்பான தேசிய கருத்தரங்கு புதுடில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. அதில் அப்துல் கலாம் கலந்துகொண்டு பேசுகையில்-

ராமாயண காலத்தை நாம் அறுதியிட்டு அறிந்து கொள்ளும் வகையில் அன்றைய கோள்களின் இயக்கங்கள் குறித்து வால்மீகி ஏராளமான தகவல்களை அந்தக் காவியத்தில் தந்திருக்கிறார்.

ராமாயணத்தில் வரும் குறிப்புகளைக் கொண்டு ஆராய்ந்ததில் இராமாயணம் நிகழ்ந்து சுமார் 7000 ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு பல அறிஞர்கள் வந்துள்ளனர்.

வால்மீகி ராமாயணத்தில் தரும் குறிப்புகளின்படியே அதே இடத்தில்தான் ராமர் கட்டிய சேது (பாலம்) இன்றைக்கும் இருக்கிறது. கடந்த 7000 ஆண்டுகளில் இந்தப் பகுதியில் கடலில் நீர்மட்டம் சுமார் 9 அடிக்கு அதிகரித்துவிட்டதாக அறிவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இராம சேது இன்றைக்கு கடல் மட்டத்துக்கு 9 அடி ஆழத்தில்தான் இருக்கிறது.

பேச்சு வழக்கு எப்போது வந்தது, வால்மீகி ராமாயணம் எப்போது பாடப்பட்டது என்று ஆராய்வது அவசியம். நவீன அறிவியல் வளர்ச்சி காரணமாக தொல்லியல் துறையின் ஆராய்ச்சிப் பணிகள் எளிதாகவும் துல்லியமாகவும் உருப்பெற்றுள்ளன.

இந்த மண்ணில் வசிக்கும் நாம் அனைவரும் ஒரே மூதாதையரிடமிருந்து வந்துள்ளோம், நம் அனைவருக்கும் மூலம் ஒன்றுதான். எனவே இந்த ஆய்வுகள் நம்மை மேலும் ஒற்றுமைப்படுத்தி வலுப்படுத்த உதவும் என்றார்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர்: தனுஷன் ஜனுபரன்
முகவரி: உடுவில் கிழக்கு

அகவை 2இல்



பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

# அமெரிக்க பொருளாதார பின்னடைவால் ஒபாமாவின் செல்வாக்கு சரிந்துள்ளது



(வொஷிங்டன்)

அமெரிக்க பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதால், ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு சரிந்து வருவதாக கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

ஒபாமாவின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைய உள்ளதால், 2012 நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதில், ஜனநாயக கட்சி சார்பில் இரண்டாவது முறையாக ஒபாமா போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில், சந்தை ஆய்வு நிறுவனமான திகாலப் ஆர்கனைசேஷன் ஒபாமா வின் செல்வாக்கு பற்றி அமெரிக்காவில் கருத்து கணிப்பு நடத்தியது. அதன் விவரம் - கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரியில் அமெரிக்க அதிபராக ஒபாமா பதவியேற்றார்.

அப்போது, அவருக்கு பொதுமக்கள் மத்தியில் 50 சதவீதத்துக்கு மேல் ஆதரவு இருந்தது. இடையில் சரிந்த போதிலும், கடந்த ஜூன் மாதத்திலும் 50 சதவீதமாக இருந்தது.

மே மாதத்தில் அமெரிக்காவுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்க படை கொலை செய்தமை குறிப்பிடத் தக்கது. இந்நிலையில், ஜூலை மாத நிலவரப்படி, 41 சதவ்தம் பேர் மட்டுமே ஒபாமாவுக்கு ஆதரவு தெரி விததுள்ளனர். எனினும், ஜனநாயக கட்சியைச் சேர்ந்த இவரது போட்டியாளரைவிட இது அதிகம் தான். இவருடைய ஜனநாயகக் கட்சியில் இவருக்கு 72 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் குடியரசு கட்சியினரில் 13 சதவீதம் பேர் மட்டுமே ஒபாமாவின் செயல்பாடுகளை பாராட்டி உள்ளனர். கட்சி சாராதவர்களில் 34 சதவீதம் பேர் ஒபாமாவின் செயற்பாடு திருப்தி அளிப்பதாக கூறியுள்ளனர்.

# சிரியாவில் கிளர்ச்சியில் ஈடுபட்ட 3000 பேர் காணாமல் போயுள்ளனர்

(பெய்ரூட்)

சிரியா ஜனாதிபதி பஷீர் அசாத்துக்கு எதிராக, கடந்த நான்கு மாதங்களாக நடந்து வரும் போராட்டம் காரணமாக, இதுவரை கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில், மூவாயிரம் பேர் காணாமல் போயுள்ளனர் என, தகவல் வெளியாகியுள்ளது.

சிரியா ஜனாதிபதி பஷீர் அசாத்துக்கு எதிராக, அநநாட்டு மக்கள் கடந்த நான்கு மாதங்களாக, கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கிளர்ச்சியாளர்களின் மீது, சிரியா ராணுவத்தினர் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். கிளர்ச்சி தொடங்கிய, மார்ச் 15 ஆம் திகதி முதல், ஆயுதம் இல்லாமல் கிளர்ச்சி செய்தவர்களில், 1,600 பேரை சிரியா ராணுவத்தினர் கொன்றுள்ளனர்.

இதுகுறித்து கிளர்ச்சியாளர்கள், தங்கள் இணையத் தளத்தில் மேலும் கூறியிருப்பதாவது: ஜனாதிபதி பஷீர் அசாத்துக்கு எதிராக, போராடி வரும் கிளர்ச்சியாளர்களை, ராணுவத்தினர் கடுமையான முறையில், கையாண்டு வருகின்றனர்.

அமைதியாகப் போராடுவோரைக் கூட, வீண்பழி சுமத்தி மிருகத்தனமாக நடத்துகின்றனர். இவர்களில் பலர் கைது செய்யப்பட்டும், அவர்கள் எங்கு உள்ளனர் என்பது தெரியவில்லை. ஒரு மணி நேரத்திற்கு ஒருவர் என, கிளர்ச்சியாளர்கள் மாயமாகி வருகின்றனர். இவ்வாறு, இதுவரை 2 ஆயிரத்து 918 கிளர்ச்சியாளர்கள் மாயமாகி விட்டனர். அவர்கள் குறித்து எந்த விபரமும் தெரியவில்லை என அந்த இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது.

# அதிகார வர்க்கத்தினர் திருடிய பணத்தை கோரும் மக்கள்

(எகிப்து)

எகிப்து -துனிஷியா உள்ளிட்ட நாடுகளில் நிகழ்ந்த மக்கள் புரட்சியின் மூலம் அந்நாடுகளின் அதிபர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினர் மக்களைச் சுரண்டிச் சேகரித்த செல்வத்தின் அளவு வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ளது.

அவர்கள் திருடிய பணத்தை மீண்டும் தங்களுக்கே அளிக்க வேண்டும் என அந்நாட்டு மக்கள் கோரி வருகின்றனர். ஆபிரிக்காவின் துனிஷியாவில் தான் முதலில் மக்கள் புரட்சி வெடித்தது. அதையடுத்து எகிப்து, லிபியா, பக்ரைன், ஏமன், ஓமன், கத்தார், சிரியா, ஜோர்டான், மொராக்கோ என அரபு நாடுகளில் புரட்சி வெடித்தது.



இவற்றில் தற்போது துனிஷியா மற்றும் எகிப்தில் மட்டுமே புரட்சி ஓரளவுக்கு வெற்றியளித்துள்ளது.

# அமெரிக்கப் படையினர் வெளியேற்றம் ஈராக்கில் அதிகரிக்கும் தாக்குதல்கள்

(பாக்தாத்)

ஈராக்கின் தற்போதைய நிலைமை முன்னரை விடவும் ஆபத்தாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடத்தை விடவும் தற்போது ஈராக்கில் தாக்குதல்கள் மற்றும் உயிரிழப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஈராக்கிலிருந்து அமெரிக்க துருப்பினர் வெளியேறவுள்ள நிலையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் படையினர் மற்றும் ஈராக்கிய முக்கிய அரசியல்வாதிகள் மீதான தாக்குதல் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக ஈராக்கிற்கான அமெரிக்காவின் காவல்துறை உயரதிகாரி ஸ்டுவர்ட் வீ. பௌவுன் ஜூனியர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் எஞ்சியுள்ள 47000 அமெரிக்க துருப்பினரையும் வாபஸ்பெற்றுக்கொள்ள அமெரிக்கா உத்தேசித்துள்ளது.

எனினும், முன்னைய இராணுவ மதிப்பீடுகளில் ஆபத்து நிலைமகள் குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை. 2006, 2007 ஆம் ஆண்டுகளை விடவும் தற்போதைய நிலைமை சாதகமாகவே அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க துருப்பினர் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், ஈராக்கிய துருப்பினருக்கு தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்குவதற்கு ஒமாபா நிர்வாகம் திட்டமிட்டுள்ளது

# வேலைவாய்ப்புச் செய்திகள்

1) யாழ். நகரில் பிரபல கட்டட நிர்மாணப் பணி நிறுவனததுக்கு சைட் சுப்பவைசர் (Supervisor) தேவை. வார இறுதிக்குள் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
Metro Engineering (pvt) Ltd
212 Plaly Road, Jaffna.
kpd;dQ;ry; suren@metrohomes.lk

2) முகாமையாளர் - சஞ்சிகை ஆசிரியர் தேவை
யாழில் மாதாந்த சஞ்சிகை ஒன்றிற்கு முகாமையாளராகவும் சஞ்சிகை ஆசிரியராகவும் கடமையாற்றக்கூடிய விளம்பரங்களில் அனுபவம் உள்ளவருமான ஆசிரியர் தேவை. (இருபாலாரும்)
தொடர்புகளுக்கு : தீபன் 0773380508

3) **John Keells Logistics (Pvt)Ltd.**
யாழ்ப்பாணத்தில் கீழ்க்காணும் புதிய செயற்பாட்டுக் குழுவில் இணைத்துக் கொள்ளப் பொருத்தமான தராதரம் கொண்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

- திட்ட இணைப்பாளர்
- டிரக் சாரதி
- டிரக் உதவியாளர் / சுத்திகரிப்பாளர்

விண்ணப்பதாரி ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். தமிழ் அறிவுடன் சிங்கள மொழி அறிவும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழிப் புலமை மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும். விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 12.08.2011 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
நோபேட் ரவிச்சந்திரன்,
நேசன் டிரஸ்ட் வங்கி,
இல.35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

4) வீட்டிற்கு காவலாளி ஒருவர் தேவை. உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும். குறிப்பாக குடிப் பழக்க மற்றவர் விரும்பத்தக்கது. சம்பளம் தீர்க்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம் : 0714270496

5) கொழும்பு -02 இலுள்ள **Electrical Shop** ஒன்றிற்று மும்மொழிகளும் தெரிந்த **Sales Girls** தேவை. தங்குமிட வசதியுண்டு. நேர்முகப் பரீட்சைக்கு வார நாட்களில் காலை 9 மணிமுதல் 11 மணி வரை சமூகமளிக்கவும். இல.226 Vaux hall Street Colombo -02 சம்பளம் பேசித் தீர்மானிக்கப் படும்.

6) வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல புடவைக் கடைக்கு ஆண், பெண் **(Selesmen, Sales Girls)** வேலையாட்கள் தேவை. ஆண்களுக்கு தங்குமிட வசதியுண்டு. சம்பளம் அனுபவத்திற்கேற்ப பேசித் தீர்மாணிக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம் 0115737899.

7) வீட்டுப் பணிப்பெண் தேவை. கொழும்பில் தங்கி வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. மாதச் சம்பளம் 10-12 ஆயிரம் வரை வழங்கப் படும். தொடர்புகளுக்கு 0114551800, 0727944584, 22 Galle Road, Dehiwala.

8) சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கி வேலை செய்யக் கூடிய மலையகத்தைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் உடன் தேவை. மாதச் சம்பளம் 10,000 இற்கு மேல் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0115232903, 072 7944586.

9) ஹாட்வெயார் நிறுவனத்தில் லொறியில் இரும்புப் பொருட்களை ஏற்றி, இறக்க உதவியாளர் ஒருவர் தேவை. கடின உழைப்புக்கு ஏற்ற நல்ல சம்பளம் வழங்கப் படும். தொடர்கொள்ளவேண்டிய இலக்கம் : 0773329667.

10) கொழும்பில் உள்ள பிரபல்யமான ஹாட்வெயார் கடைக்கு தங்கி வேலை செய்யக்கூடிய **(Stores Keeper)** தேவை. முன் அனுபவம் இருந்தால் விரும்பத்தக்கது. வேலை பழகி, வேலை செய்யக்கூடியவர்களும், தொடர்பு கொள்ளலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கம் 0715324601.

11) மரக்கறி, சில்லறை சாமான் கடையில் நிறைபோடத் தெரிந்த ஆட்கள் உடன் தேவை. சம்பளம் 21 ஆயிரம். சாப்பாடு, தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும். தொடர்புகளுக்கு :0112825333

12) கொழும்பிலுள்ள ஹாட்வெயர் கடைக்கு கனரக வாகன சாரதிகள் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதி உண்டு. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப் படும். அனுபவமுள்ளவர்கள் ஆவணங்களுடன் நேரில் வரவும். இல.20, குவாரி றோட், கொழும்பு -12.


13) கொழும்பில் தங்கி வேலை செய்யக்கூடிய கார் சாரதி **(Driver)** தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக் கப்படும். வயது 45-55 இற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புக்கு : 077377659.

14) கொழும்பு -13 ஜிந்துப்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள தாதிமார் உடன் தேவை.
தொடர்புகொள்ளவும் Dr.Srikanth 0777266570.

15) கொழும்பு -04 **Doctor** இன் வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்புகளுக்கு :0777802495

# இலங்கை பிரச்சினைக்கான தீர்வு இந்தியாவின் கையில்தான் உள்ளது

## சென்னையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கை இனப் பிரச்னைக்கான தீர்வு இப்போது இந்தியாவின் கையில் தான் உள்ளது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கக் கோரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய சிறப்பு மாநாடு சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் போர் முடிந்து விட்டது. ஆனால்,தமிழர்களின் பிரச்னைகள் முடியவில்லை. போருக்குப் பின்தான் பிரச்சினைகள் மேலும் அதிகமாகியுள்ளன.

தமிழர்களுக்கு அதிகார பகிர்வு அளிக்க வேண்டும், சம உரிமை வழங்க வேண்டும் என்ற சிந்தனையோ, அதற்கான அக்கறையோ இலங்கை அரசிடம் அறவே இல்லை.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியில் குறிப்பிடத்தக்க வெற்றி பெறவேண்டும் என்பதில் இலங்கையின் ஆளும் கட்சி அதிக முனைப்புக் காட்டியது.

ஆனால் தமிழ் மக்கள் ஓரணியில் நின்று, வாக்களித்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் பெரும் வெற்றி தந்தனர்.

இலங்கை அரசைப் பொருத்தவரை திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுடன் செயல்பட்டு வருகிறது. தமிழர் பகுதிகளை முதலில் இராணுவமயப்படுத்துவது. அதன் தொடர்ச்சியாக அந்தப் பகுதி முழுவதையும் புத்தமயமாக்குவது. இறுதியில் சிங்களமயமாக்குவது என்பதே இலங்கை அரசின் திட்டம்.

மொத்தத்தில், தமிழர்களுக்கு சம உரிமை அளிப்பதிலோ, அதிகாரப் பகிர்வு வழங்குவதிலோ, சுமூகமான அரசியல் தீர்வை எட்டுவதிலோ இலங்கை அரசுக்கு துளியும் விருப்பமில்லை.

இந்தச் சூழலில், எந்த நாடு சொல்வதையும் கேட்க அரசு தயாராக இல்லை. ஆனால்,இந்தியா சொல்வதை இலங்கை அரசால் மறுக்க முடியாது. இலங்கையை நிர்பந்தப்படுத்தி, தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கச் செய்ய இந்தியாவால் மட்டுமே முடியும்.

இலங்கைத் தமிழர்கள் இந்தியாவை மட்டுமே நம்பி உள்ளனர். இலங்கை இனப் பிரச்னைக்கான தீர்வு இப்போது இந்திய அரசின் கையில்தான் உள்ளது.

இப்போது கூட இந்தியா அதைச் செய்ய முன்வராவிட்டால், இலங்கையில் ஒரு இனத்தையே அழித்தொழித்த குற்றத்துக்கு இந்தியர்களும் துணை போனார்கள் என்றே எதிர்கால வரலாறு கூறும் என்றார்.

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் சீனா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம் மாதம் சீனாவுக்கு மற்றுமொரு பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அரசு முறைப் பயணமாக மகிந்த ராஜபக்ஷ இம் மாதம் சீனாவுக்குச் செல்லவுள்ள போதும் அதற்கான நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

கடைசியாக கடந்த நவம்பர் மாதம் மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். பத்து மாதங்களுக்குள் இரண்டாவது பயணத்தை அவர் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ளார். 2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷ மூன்று தடவைகள் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் சீனா முதலீடுகளைச் செய்துள்ளதுடன், கடன் வழங்கும் நாடுகளில் முதன்மை இடத்தையும் சீனாவே வகித்து வருகிறது குறிப்பிடத்தக்கது.

# உயர்தரப் பரீட்சை நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை



(கொழும்பு)

இம்முறை உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ள அனைத்துப் பரீட்சை மத்திய நிலையங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ரோந்து சேவையொன்றை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பரீட்சை தொடர்பாடல் மத்திய நிலையங்களில் நிரந்தரமான குழுவொன்றை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் அமைப்படவுள்ள பரீட்சை நிலையங்களின் பாதுகாப்பிற்காக முப்படைகள் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் இரண்டு இலட்சத்து 94 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இந்தப் பரீட்சைஇரண்டாயிரத்து 400 மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

# ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜெனீவா கூட்டத்தில் விவாதிக்கப்படும்

## -அமெரிக்கா அறிவிப்பு-

(கொழும்பு)

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை குறித்து விவாதிக்கப்படும் என்று இலங்கை அரசுக்கு அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவினது முறைப்படியான இந்த இராஜதந்திர நிலைப்பாடு, இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஊடாக கடந்தமாதம் கையளிக்கப் பட்டது. இதற்கு இலங்கை இன்னமும் அதிகாரபூர்வமாக பதில் எதையும் வெளியிடவில்லை.

ஆனால், பெரும்பாலும் அமெரிக்காவின் இந்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரிக்கும் என்று தனது பெயரை வெளியிட விரும்பாத வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். அமெரிக்காவின் இந்தக் கோரிக்கைக்கு தாம் இணங்கினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தொடர்ச்சியான கண்காணிப்பில் இருக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். அதேவேளை, இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா நட வடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சாத்தி யங்கள் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


# ஆந்திராவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 147 தமிழர்களும் சென்னைக்கு அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

ஆந்திர மாநிலத்தில் உள்ள துணி காவல்நிலையத்தில் கடந்த மூன்று நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 147 ஈழத்தமிழர்களும் நேற்றுமுன்தினம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆந்திர காவல்துறையின் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் இவர்கள் தமிழ்நாடு காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு சிர்கார் விரைவு தொடருந்து மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களின் கடவுச்சீட்டுகள், அகதி முகாம்களில் வழங்கப்பட்ட அடையாளச் சான்றுகள், சரிபார்க்கப்பட்ட பின்னர், சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கிழக்கு கோதாவரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரிவிக்ரம் வர்மா தெரிவித்துள்ளார். சந்தேகத்துக்கிடமான முறையில் லோவாவில் உள்ள தலுபுல்லம்மன் ஆலயப் பகுதியில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தம்மை ஐந்து முகவர்கள் கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி அழைத்து வந்ததாக கூறியுள்ளனர். ஒவ்வொருவரிடம் இருந்தும் முகவர்கள் 5000 ரூபா பணத்தை பெற்றுக் கொண்டதாகவும், லோவா ஆலயத்தில் இருந்து விசாகப்பட்டினத்துக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகவும் அவர்கள் வாக்குறுதி அளித்தாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்.



13 நாட்களுக்கு முன்னர் இவர்கள் லோவாவுக்கு அனுப்பப்பட்ட நிலையில் உள்ளூர் முகவர்கள் காவல்துறையின் பிடியில் சிக்கியுள்ளனர்.ஆந்திராவில் கைது செய்யப்பட்ட அகதிகள் மீது தாம் எந்த வழக்கையும் பதிவு செய்யவில்லை என்றும் அவர்களை சென்னை காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளதாகவும், ஆந்திர காவல்துறை கண்காணிப்பாளர் திரிவிக்ரம் வர்மா தெரிவித்துள்ளார். சென்னை காவல்துறையினர் அகதிகளை ஏமாற்றியதாக முகவர்கள் மீது வழக்குப் பதிவு செய்வார்கள் என்று நம்புவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சர்வதேச வலையமைப்பு கொடுக்கல்,வாங்கல் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

சர்வதேச வலையமைப்பு மூலம் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போதும், வங்கிச் செயற்பாடுகளில் ஈடுபடும் போதும், அதுபற்றி மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சர்வதேச வலையமைப்பைப் பயன்படுத்துவோருக்கு குற்ற விசாரணைத் திணைக்களம் எச்சரிக்கை அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

சர்வதேச இணையத்தள வலையமைப்பினூடாக நிகழ்த்தப்படும் குற்றங்களில் அதிகரிப்பு காணப்படுகிறது எனவும் எனவே சர்வதேச இணையத்தள வலையமைப்பு ஊடான கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளில் பாதுகாப்பு எச்சரிக்கை செலுத்துவது முக்கியமானது எனவும் மேற்படி திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த குலதிலக்க தெரிவித்துள்ளார்.

தற்போது கணினி குற்றவாளிகள் சம்பந்தமாக குற்ற விசாரணைத் திணைக்களம் விரிவான விசாரணைகள் பலவற்றையும் மேற்கொண்டு வருவதாகவும் கணினி மற்றும் சர்வதேச வலையமைப்பு குற்றவாளிகளுக்கு இரையாகும் எந்த ஒருவரும் அதுபற்றி 011242 2176 அல்லது 0112380380 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்கமுடியும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கணினி குற்றமிழைப்புக்கள் சம்பந்தமாக பரிசீலிக்கத்தக்க பரிபூரணமான ஆய்வுகூடம் தற்போது குற்ற விசாரணைகள் திணைக்களத்தின் வசமுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மலைப் பாம்புகள் படையெடுப்பு



நாவலப்பிட்டி, கம்பளை ஆகிய பிரதேசங்களில் மகாவலி ஆற்றோரத்தில் அண்மைக் காலமாக தென்படுகின்ற மலைப்பாம்புகள் பிரதேச மக்களிடம் அகப்படுவது வாடிக்கையாகிவிட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கம்பளை நகரத்துக்கு அருகிலுள்ள கம்பலவெல பாலத்துக்கு அருகில் தென்பட்ட மலைப்பாம்பினை பிரதேச மக்கள் லாவகமாகப் பிடித்துக் கம்பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## நீரில் மூழ்கி இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை தீர்த்தக் கேணியில் நீராடிய ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சுதுமலை தெற்கு பகுதியைச் சேர்ந்த செ.விஜிதரன் (வயது-31) என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்தவராவார்.(எஸ்)

# விசமத்தனமான விமர்சனம் சம்பந்தனுக்கு பகிரங்க மடல்

## ஆனந்தசங்கரியின் உள்ளக்குமுறல்



(யாழ்ப்பாணம்)

சித்தார்த்தன் போன்று டக்ளஸ் தேவானந்தாவும் மாற வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் தெரிவித்த செய்தியைக் கண்டு தான் அதிர்ச்சி அடைந்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் சம்பந்தன் அவர்களுக்குக் கடிதமொன்று அனுப்பியுள்ளார்.

அன்புள்ள சம்பந்தர் ஐயா அவர்கட்கு,

ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் போன்று டக்ளஸ் தேவானந்தாவும் மாறவேண்டுமென தாங்கள் கூறியதாக வெளியான செய்தியைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

தமிழ் மக்களின் இன்றைய இக்கட்டான நிலையில் தங்களின் இக்கூற்று அவசியமானதுதானா? என்பது எனது முதலாவது கேள்வி.

இது என்னைப் பற்றிய ஒரு விசமத்தனமான விமர்சனம் இல்லையா? என்பது எனது இரண்டாவது கேள்வியாகும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் உண்மையைப் பேசி தமிழ் இனம் சார்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகியோர் செயற்பட்டார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன்.

டக்ளஸ் தேவானந்தாவும் அவ்வாறு மாற வேண்டும் எனவும் கூறியுள்ளீர்கள். இது ஓர் விசமத்தனமான விமர்சனம் என்றும் இது எம்மக்களின் நலனைப் பாதிக்கும் விடயமாக, உங்களுக்கும் புரியவில்லையா?

சித்தார்தனும் டக்ளஸும் தங்கள் நிலையை வெளிப்படுத்துவார்கள். என்னைப் பொறுத்தவரை இத்தேர்தலில் மட்டுமல்ல, எந்தத் தேர்தலிலும் உண்மையை மட்டுமே கூறிவந்துள்ளேன்.

நெஞ்சில் நிறைந்துள்ள சுமையை இறக்கி வைத்துவிட்டேன். எவரின் அழைப்புமின்றி நானும், தம்பி சித்தார்த்தனும் எதுவித பலனையும் எவரது கைகளையும் எதிர்பாராது அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம்.



கடந்த ஆறு மாதங்களாகியும் இதுவரை தங்களின் பாராட்டை எதிர்பார்க்காத நிலையில் தங்களின் கருத்து எமக்கும் கூடுதலாக எமது ஆதரவாளர்களுக்கும் வேதனையளிக்கிறது.

நான் தங்களைப் பற்றிய விமர்சனங்களைச் செய்ய முற்பட்டால் நீங்களல்ல, எம் மக்கள் தான் மிகவும் வேதனையடைவார்கள்.

என்னுடைய நிலைப்பாடு அன்றும், இன்றும் ஒன்றுதான். மாறுவதற்கு ஒன்றுமில்லை. இப்பேர்ப்பட்ட விமர்சனங்களால் தான் இன்று எம் இனத்திற்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பியுள்ள பகிரங்க கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

# ஆதிவாசிகள் தினவிழா ஜனாதிபதி பிரதம அதிதி



உலக ஆதிவாசிகள் தினத்தினை முன்னிட்டு வாகரை, சல்லித்தீவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆதிவாசிகளின் ஒன்றுகூடல் நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கை ஆதிவாசிகளின் தலைவர் உ.வன்னிலத்தோவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர்களான ஜகத் பாலசூரிய, ரீ.பி. ஏக்கநாயக்க, எஸ்.ஏ.சந்திரசேன, சாலிந்த திஸாநாயக, பிரதியமைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன், எம்.எல்ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக் ரம, கிழக்கு முதல்வர் சிவனேசதுரை சந்திரகாந்தன், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஆதிவாசிகளின் தலைவர் உ.வன்னிலத்தோவிற்கு ஜனாதிபதி விசேட அடையாள அட்டை வழங்கிவைத்ததுடன் ஆதிவாசிகள் சுதந்திரமாக நடமாட்டம் செய்வது தொடர்பாக ஆதிவாசிகளுக்கும் வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கும் இடையிலான ஒப்பந்தமும் இடம்பெற்றது. ஆதிவாசிகளின் பொருட்காட்சி மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வில் இடம்பெற்றன.

நாட்டில் ஐம்பத்தேழு பிரதேசங்களில் இருந்து தலா 50 ஆதிவாசிகள் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டதுடன் அவுஸ்திரேலிய நாட்டு ஆதிவாசியொருவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கிராம அலுவலர்களுக்கு சேவைப் பொதி




(மட்டக்களப்பு)

அடை மழை பெரு வெள்ளத்தினால் பல முறை பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களுக்குச் சேவையாற்றிய கிராம சேவகர்களுக்கு உதவும் திட்டத்தின் கீழ் யூஎஸ்எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு (சொண்ட்) எழுது கருவிகள், சப்பாத்து, டோர்ச் லைற், மழைக் கவசம் உள்ளிட்ட தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொதியை வழங்கியுள்ளது. வாகரைப் பிரதேச கிராம சேவகர்களுக்கு மேற்படி பொதிகள் கையளிக்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் செல்வி. ஆர். ராகுல நாயகி மற்றும் சொண்ட் நிறுவன இணைப்பாளர் எஸ். சுதர்ஷன் ஆகியோருட்பட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

## அரசுடனான....

கொள்கையளவிலான ஒப்புதலை ஏற்கனவே வழங்கியிருக கிறது. எனினும், அரசு உறுதி வழங்கியமைக்கு அமைவாக இதுவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகத் தனது எழுத்து மூலமான பிரேரணை எதனை யும் சமர்ப்பிக்கவில்லை என்றும்

அரசு தனது உறுதி மொழிக்கமைவாக எழுத்து மூலமான பிரேரணைகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் கூட்டமைப்பினராகிய நாம் அரசுடனான பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்திக் கொள்வோம் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக ஓகஸ்ட் மாத இறுதிக்குள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசின் பிரேரணைகள் அடங்கிய எழுத்து மூல ஆவணத்தை அரசிடமிருந்து தாம் எதிர்பார்ப் பதாகவும் அது சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் தாம் அரசுடனான பேச்சுக்களை நிறுத்திக்கொள்ளப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுமக்கள்...

தனைத் தொடர்ந்து புலிகள் தம்மை சரியாக கவனிக்கவில்லை என வும் அவர் முறைப்பாடு செய்துள்ளதாக ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கடல் வழியாக தப்பிச் செல்ல முற்பட்டபோது கடற்படையினர் தம்மையும் பிள்ளைகளையும் காப்பாற்றியதாக சூசையின் மனைவி தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தம் தொடர்பான விவரணப் படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த விவரணச் சித்திரத்தில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களான சூசை மற்றும் தமிழ்ச் செல்வன் ஆகியோரின் மனைவியர் தங்களது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

தமது பிள்ளைகள் கொழும்பு பாடசாலைகளில் கல்வி பயில்வதாகவும், இராணுவத்தினர் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் குறித்த இருவரும் படையினருக்கு புகழ் மாலை சூட்டியுள்ளனர்.

## ஐயாயிரம்....

நடைமுறை பின்பற்றப்படவில்லை. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, தெல்லிப்பழை பிர தேச செயலர் பிரிவு மற்றும் அராலிப் பகுதி ஆகியவற்றி லேயே கிராம சேவகர்கள் அறிவித்தல்களை உரிய முறையில் பின்பற்றவில்லை. இதனால் 5 ஆயிரம் வாக்காளர்கள் வரையில் பதிவு செய்யப்படாமல் விடுபட்டுள்ளனர்.

இதனால் இந்த ஐயாயிரம் பேரும் இம்முறை தேர்தலில் வாக்களிக்க முடியாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 'சப்றா' நிதி....

மாவை சேனாதி ராஜாவை மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் "மிஸ்டர் கிளீன்" எனக் குறிப்பிட்டுள்ள பேராசிரியர் கூல் "சப்றா" நிதி நிறுவன மோசடியில் சம்பந்தப்பட்ட இதர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைத் தெரிவிக்க வில்லை.


அப்பாவி மக்களின் வாழக்கையை "சப்றா" நிதி நிறுவனம் அழித்தது எனத் தனது கட்டுரையில் குறிப்பிடும் பேராசிரியர், இந்த மோசடியில் சம்பந்தமான இதர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை குறிப்பிடாதது, அவர்களை இவர் பாதுகாக்க முயல்கிறாரா என்ற ஐயுறவை ஏற்படுத்தியுள்ளதாகவே கருதப்படுகிறது.

## செய்திப்பாணம்

ஊடகவிய லாளரொன்று மூலகத்தில் மாறுபாடில்லை
நாடகவாழ் பரப்பதில் நாலுமவர்க்கும் - தேடநேரும்
அடியுதை கடத்தல் கொலை அனைவர்க்கும் ஒன்றாமே
தடியெடுக்கின் சண்டியரா தேர்!



# யாழ்.நகரில் கலாச்சாரப் பிரதிபலிப்பு
# சிலைகளும் சிற்பங்களும் நிறுவ ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான சிற்பங்களையும், சிலைகளையும் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

யுத்தத்திற்குப் பின்னர் மீளப் புனரமைக்கப்பட்டுவரும் யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலியனின் சிலை நிர்மாணப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை சென்று பார்வையிட்டார். அமைச்சர் அவர்களுடன் சங்கிலியன் சிலையை 1974 ஆம் வருடம் முதன் முறையாக உருவாக்கிய சிற்பி செல்லையா சிவப்பிரகாசம் அவர்களும் யாழ்பல் கலைகழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களும் உடனிருந்தனர்.

பின்னர் நல்லூர் ஆலயத்திற்கு சென்ற அமைச்சர் அவர்கள் ஆலயச் சூழலைப் பார்வையிட்டதுடன் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள புல்லுக்குளம் சுற்றுச் சூழலையும் பார்வையிட்டார்.

கலாசார நிலையம் அமையப் பெறவுள்ள நிலையில் இப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பண்டைய கலை இலக்கிய கலாசார விழுமியங்களைப் பறைசாற்றும் முகமான சிற்பங்கள் மற்றும் சகல துறைசார் முன்னோடிகளினதும், புகழ் பூத்தவர்களினதும் சிலைகள் அமைப்பது தொடர்பில் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்ததுடன் இதற்கான நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதையும் எடுத்துக் கூறினார்.

அத்துடன் யாழ்.மத்திய கல்லூரி வளாகத்திற்கு விஜயம் செய்த அமைசசர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்தவர்களை ஞாபகமூட்டும் வகையில் அன்னார்களது உருவச்சிலைகளை கல்லூரி வளாகத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இவ் விஜயத்தின் போது அமைச்சர் அவர்களுடன் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சொல்லின் செல்வர் இரா.செல்வடிவேல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வங்கியாளர் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 50 ஆவது பொன்விழா நிகழ்வில் மூத்த வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் பிரதம உதவி முகாமையாளர்கள தே.சுசீந்திரன், என்.நாகேஸ்வரன் மத்திய வங்கி ஓய்வூதியர் சங்கத் தலைவர் பி.தர்மநாயகம், வாழநாள் வங்கியாளர் சுந்தரலிங்கம், வங்கி ஊழியர் சங்கத் தலைவர் த.ஆனந்தராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் மற்றும் விருந்தினர் உரை என்பன இடம்பெற்றது.

மூத்த வங்கியாளர்களா, இளைய வங்கியாளர்களா சிறந்த வங்கியாளர்கள் எனும் தொனிப் பொருளில் வங்கி ஊழியர்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

இதில், இளைய வங்கியாளர்கள், மூத்த வங்கியாளர்களே அனுபவம் வாய்ந்தவர்கள். அவர்கள் பாதை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். நாம் அதில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். எங்களுடைய அனுபவங்களை விட மூத்த வங்கியாளர்களின் அனுபவங்களும், சேவைக் காலமும் அதிகமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு நோக்கும்போது மூத்த வங்கியாளர்களே சிறந்த வங்கியாளர்கள் என தமது கருத்துக்களை முன்வைத்தார்கள். (எஸ்),(52)

# புலிகளுடன் தொடர்பு இருவரை நாடுகடத்த முடிவு
## மலேசிய அரசு அதிரடி

புலிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், மலேசியாவின் உள்ளகப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவ்விருவரின் விபரங்களை நாளை வெளியிடப்படவுள்ளதாக மலேசிய உள்துறை அமைச்சர் தட்டுக் சேரி ஹஷாமுதீன் தெரிவித்துள்ளார்.

# தாய்ப் பால் ஊட்டுவதில் சாதனை



தெற்காசிய நாடுகளிலேயே குழந்தைகள் பிறந்து முதல் மணித்தியாலத்திலேயே தாய்ப் பால் வழங்கும் அதிக சதவீதத்தைக் கொண்ட தாய்மார்கள் உள்ள நாடாக இலங்கை இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த சதவீதம் தற்போது 85 ஆக நிலவுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தை பிறந்து முதல் மணித்தியாலத்தில் வழங்கப்படும் தாய்பால், அந்த குழந்தையை வாழ்நாள் முழுவதும் நோயகளில் இருந்து பாதுகாக்கும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் இன்றிலிருந்து ஒருவார காலத்திற்கு தாய்ப்பாலூட்டும் தேசிய வாரம் கொண்டாடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.


# நாடு திரும்புகிறார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவப் பிரச்சினையைத் தொடர்ந்து தனது பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு இலங்கைக்குத் திரும்பவுள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க, ஒகஸ்ட் 3 ஆம் திகதி இலங்கைக்கு திரும்புவதற்கு திட்டமிட்டிருந்தார். எனினும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவ பிரச்சினையைத் தொடர்ந்து அவர் இன்றைய தினமே நாடு திரும்பவுள்ளதாக ஜோன் அமரதுங்க கூறினார்.

# வீதி விளக்குகள் பொருத்தல்
# நல்லூர் பிரதேசத்தில் துரிதம்



கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுடைய நிதி ஒதுக்கீட்டிலும், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் திரு.அம்பலம் இரவீந்திரதாசன், பிரதேச சபை உறுப்பினர், நல்லூர் பிரதேசசபை அவர்களுடைய வழிகாட்டலிலும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் தெருவோர மின் விளக்குகள் பொருத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அப்பகுதி மக்கள் இதன் மூலம் மிகவும் பயன்பெற்று வருகின்றனர்.

ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி, நந்தாவில் அம்மன் கோவிலடி, குட்செட் றோட், கோண்டாவில், கே.கே.எஸ்.றோட், பூநாறி மரத்தடி, பாற்பண்ணை வீதி, முடமாவடி சந்தி, செங்குந்தா இந்துக் கல்லூரி வீதி, பூதவராயர் வீதி, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, கொக்குவில் இந்துக்கல்லூரி லேன், மணியர் வீதி, உடையார் லேன், கொக்குவில் பொற்பதி வீதி, கோண்டாவில்முத்தட்டு வீதி, மஞ்சத்தடி இணுவில் காரைக்கால் இணுவில் ஆகிய பகுதிகளிலேயே இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

# குகநாதன் மீதான தாக்குதல்; விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

உதயன் பத்திரிகை ஆசிரியர் குகநாதன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக, ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இனந்தெரியாத நபர்கள், உதயன் பத்திரிகை ஆசிரியர் மீது கடந்த 29 ஆம் திகதி கடுமையான தாக்குதல் நடத்தியிருந்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த குகநாதன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நமசிவாயம் சிவபதமடைந்தார்

திருக்கேதீஸ்வரம் நமச்சிவாயம் சிவபதம் அடைந்தார். இவர யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்தவராவார். திருக்கேதீஸ்வரத் திருப்பணிகளில் நீண்ட காலமாக உணர்வு பூர்வமாக ஒன்றித்துச் செயற்பட்டவர் நமசிவாயம் அவர்கள்.

வழக்கறிஞராகிய அவர் மிகுந்த சைவப்பற்றுக் கொண்டு சைவச் சிறுவர்களை ஆதரிப்பதிலும். சைவாலய புனரமைப்பிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, வாழ்ந்தார். நூறாண்டுகள் வாழ்ந்த நமச்சிவாயம் அவர்கள் நேற்று முன்தினம் ஆடி அமாவாசைப் புண்ணிய தினத்தில் அதிகாலையில் கொழும்பில் சிவப்பேறெய்தினார்.

# எம்.பி.க்கள் குழு இந்தியா பயணம்

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவினர் ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று இந்தியாவுக்கு பயணமாகியுள்ளனர்.

இரண்டு நாடுகளினதும் நாடாளுமன்றங்களுக்கு இடையிலான சுமுக உறவை மேம்படுதத்தும் நோக்கில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுவதாக சபாநாயகரின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இந்திய ஜனாதிபதி, உப ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற நற்புறவு சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் இக் குழுவில் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன, ரிஷாட் பதியுதீன், பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, எஸ்.அடைக்கலநாதன், டி.எம்.சுவாமிநாதன், மாலினி பொன்சேகா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# வவுனியாவில் இன்று விவசாயக் கண்காட்சி

(கொழும்பு)

வவுனியா அரசாங்க விவசாய பண்ணையில் இன்று ஆரம்பமாகும் விவசாய கண்காட்சியில் பனை அபிவிருத்திச் சபையின் சகல உற்பத்திப் பொருட்களும் காட்சிக்கும் விற்பனைக்கும் இருக்கும். என பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர். இந்த கண்காட்சி மைதானத்தில் விவசாயம் பற்றிய 135 கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதம மந்திரி டி.எம்.ஜெயரட்ன வைபவரீதியாக நிகழ்வை ஆரம்பித்துவைப்பார்.

ஐந்து தினங்களுக்கு நடைபெறும் விவசாய கண்காட்சியினை பொதுமக்கள் காலை 10 மணிமுதல் மாலை 6.30 மணிவரை இலவசமாக பார்வையிடலாம் என வவுனியா மாவட்ட விவசாய விரிவாக்கல் உதவிப்பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெகநாதன் தெரிவித்தார்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஓகஸ்ட் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.